# பாதுகாவலன்

PATHUKAVALAN


**இவ்வாரவிநியோகம்**

| | |
|---|---|
| யாழ். சென் ஜேம்ஸ் | 500 |
| பாஷையூர் பங்கு | 395 |
| யாழ். பேராலயம் | 289 |
| கரம்பொன் பங்கு | 272 |
| இளவாலைப் பங்கு | 264 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| பருத்தித்துறை பங்கு | 242 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| நெடுந்தீவு பங்கு | 201 |
| மானிப்பாய் பங்கு | 200 |
| மன்னார் பேராலயம் | 192 |
| வங்காலை பங்கு | 185 |
| பாண்டியன் தாழ்வு | 175 |
| மண்டைதீவு பங்கு | 173 |
| சுன்னாகம் பங்கு | 155 |
| மொத்தப் பிரதிகள் | 7670 |


மலர்: 115 இதழ் : 32 1.9.1989 (செப். 1 — செப். 8) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரஏடு



University of Jaffna, Sri Lanka RECEIVED Periodicals Division Library


அனைத்துக் கிறிஸ்தவ சபைகளின் ஏடான "டமஸ்கஸ் வழி" ஜூலை 19இல் வெளியீடு:

# 'டமஸ்கஸ் வழி' பிரிவினைகளை கைவிடுமாறு கோருகின்றது

**"டமஸ்கஸ் வழி" என்னும் இந்த ஏட்டுக்கு கத்தோலிக்கரும், பிற கிறிஸ்தவரும் விடயதானம் செய்துள்ளனர். கிறிஸ்தவர் பிரிவினைகளைக் கைவிடுமாறு கோரும் இந்த ஏடு உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.**

மணிலாவில் ஜூலை 19-ல் வெளியான அனைத்துகிறிஸ்தவ சபைகளின் ஏடொன்று உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இரண்டரை ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்ட "டமஸ்கஸ் வழி" என்னும் இந்த ஏட்டுக்கு பல நாடுகளிலிருந்து கத்தோலிக்கரும், பிற கிறிஸ்தவரும் விடயதானம் செய்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் 1985-ல் வெளிவந்த "கைரோஸ்" என்னும் ஏட்டை ஆதாரமாகக் கொண்ட "டமஸ்கஸ் வழி" இன்றைய அரசியல் போராட்டங்களில் ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் சமய அடிப்படையில் தமது செயலை நியாயப் படுத்த முயல்கின்றனர் என்றும், திருச்சபையின் ஒரு பகுதி முன்னிருந்த நிலையை ஆதரிக்க மறுபகுதி ஏழைகளை ஆதரிப்பதால் திருச்சபையே முரண்பாட்டுக்கிடமாகி விட்டதென்றும் கூறுகின்றது.

மேலும் இந்த ஏட்டில் கூறப்பட்டுள்ளவை :

— ஏழைகளின் கடவுளாகிய இறைவன் உலகில் அநீதி கண்டு கோபம்கொள்கிறார்

— சில நாடுகளில் இறைவனுக்குப் பதிலாகப் பணம், பதவி, இன்பம் ஆகியவையே தெய்வமாக வணங்கப்படுகின்றன.

— பணத்தை வணங்குவோர் தேசிய பாதுகாப்பு அரசை ஆதரிக்கின்றனர். ஏழைகளின் துன்பம் அதற்கு அவசியமான தொன்று எனக் கருதுகின்றனர். மனித பலிகள், அரசியற் கொலைகள், படுகொலைகள் மத்தியில் நாளாந்தம் வாழ்கிறோம். கொலைகள் ஒரு சமயச் சடங்கு போல் ஆகிவிட்டன மிகப் பழைமையான பாவங்களின் இன்றைய வடிவங்களை அது எடுத்துக் காட்டுகின்றது.

— கிறிஸ்தவத்தை முதலாளித்துவத்தோடு இணைப்பது பதிதம் ஆகும்.

— தாம் கிறிஸ்தவரெனக்கூறிக் கொண்டு கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்காதிருத்தல் விசுவாசத்தை மறுதலித்தலாகும்.

— இறைவனின் நாமத்தை துஷ்பிரயோகம் செய்து தூய ஆவியின் செயல்களை பசாசினுடையது எனக் கூறுவது தேவ தூஷணமாகும்.

இந்த ஏடு, டமஸ்கஸ் வழியில் சவுல் அடைந்த அனுபவத்தை இன்றைய வலதுசாரி கிறிஸ்தவரும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறது.

## மரணதண்டனை மாற்றப்பட்டது

குயிலன் மாவட்ட நீதிமன்றம் பிதா அந்தோனி லாசருக்கு அளித்த மரணதண்டனையை கேரள உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக மாற்றியுள்ளது.

மேலும் எட்டுப் பேருடன் சேர்ந்து மேரிக்குட்டி என்னும் தாதி மாணவியை கொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 50 வயதான இக் குருவுக்கு 1988 ஜூலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

## பங்கு மக்கள் உண்ணாவிரதம்

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள செக்குந்தராபாத் புனித மரியாள் ஆலயத்தின் பங்குச்சபை அங்கத்தினர் தமது பேராயர் கோயிற் காணியொன்றை குத்தகைக்கு விட்டதை ஆட்சேபித்து ஜூலை 9-ம் திகதி உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இதற்கு ஆதாரமாகத் திருச்சபைச் சட்டத்தை எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஹைதராபாத் பேராயர் அருளப்பர் அவர்கள் நகர் மத்தியிலுள்ள 9753 சதுர மீற்றர் காணியை கட்டிடக் கம்பனியொன்றுக்குக்குத்தகைக்குவிட்டதாகக்கூறப்படுகிறது. ஆனால் இதற்கென எழுதப்பட்ட பத்திரத்தில் பல ஒழுங்கீனங்கள் இருப்பதாகவும், காணி குத்தகைக்கு விடப்பட்டது திருச்சபைச் சட்டத்துக்கு முரணானதெனவும் பங்குச் சபையினரில் ஒருவரான திரு ஜோசவ் ரெட்டி கூறியுள்ளார்.

## கிராமப் புனர் நிர்மாண அமைப்பு

"விடுதலையும் அபிவிருத்தியும் ஒருங்கே நிகழவேண்டும். நாட்டின் முன்னேற்றத்தில் கிராமங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்படலாகாது"

இந்திய கிராமப் புனர்நிர்மாண அமைப்பின் 18 ஆவது பொதுக்கூட்டம் ஜூலை 6 இல் நடைபெற்றபோது அதன் இயக்குநரான பிதா எம். ஏ. வின்டி மேற்கண்டவாறு கூறினர்.

பெல்ஜிய நாட்டவரான பிதா வின்டி கடந்த இருபது ஆண்டுகளாக கிராம அபிவிருத்திக்காக உழைத்துவருகிறார். கிராமத்தில் சமூக ஆற்றலைத் தோற்றுவிப்பவர்களைக் கண்டு பிடித்து ஆதரவும் பயிற்சியும் அளிப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய எதிர்காலத்திட்டம் என அவர் தெரிவித்தார்.

இராச்சிய நிவாரண ஆணையாளர் திரு. டி. கோபால் ராவ் வெள்ளத்தினல் அழிவுற்ற குட்டப்பா, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் வீடமைப்புத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு புனர்நிர்மாண அமைப்பைக் கேட்டுக்கொண்டார்.

இந்நிறுவனம் கோதாவரிக் தமிழகத்தில் ஏற்கெனவே சில ஆய்வுகளில் ஈடுபட்டு மக்கள் தேவைகளை அறிவதற்காக 25 கிராமங்களின் பிரதிநிதிகளோடு ஒரு கூட்டத்தை நடத்தியுள்ளது.

இந்த நிறுவனம் ஜவகர்லால் நேரு நூற்றாண்டையொட்டி பத்து லட்சம் மரங்களை நடும் திட்டமொன்றை சில மாநிலங்களில் மேற்கொண்டுள்ளது.

அத்துடன் 1000 புதிய கிராமங்களில் ரூ. 5000த்துக் குறைவான செலவுள்ள சிறுசிறு திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

### 9வது ஆண்டு நினைவஞ்சலி

1-9-1989



அமரர்
தமிழ்த்தூது
தவத்திரு
S. X. தனிநாயகம்
அடிகளாருக்கு

**எம் அஞ்சலி**

தேமதுரத் தமிழ்ச்சோலைக் குயிலாய்ப் பாடித்
திசையனைத்தும் மதுரத்தேன் பொழிந்த மேகம்

பூமுகத்தை அரவணைத்தே உறவு பூண்டு
பொதுவாழ்வை இணைத்துயர்ந்த அன்புப் பாலம்

நாவலத்தால் தமிழ்த் தூதை ஞாலம் போற்ற
நயந்துலங்கத் தந்த தனிநாயகத்தை

மாதவத்தின் மகிமையொளிக் குருவாய் வாழ்ந்த
மாணிக்கத் திருவிளக்கை மறக்கலாமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### சிலுவையின் மகிமை

யேசு பாடுபட்ட திருச்சிலுவை ஜெருசலேமிலிருந்து 614ஆம் ஆண்டு பாரசீக மன்னனால் திருடப்பட்டது. 627இல் பாரசீகத்தின் மீது படை எடுத்த கொன்ஸ்தாந்திநோப்பிள் அரசன் ஹெராகளியஸ் அச்சிலுவையை மீட்டுக் கொண்டுவந்து, 629இல் கல்வாரி மலையிலுள்ள திருச்சிலுவை ஆலயத்தில் நிலைநாட்டினார். அதனை நினைவுகூருமுகமாகவே ஆண்டுதோறும் இம்மாதம் 14ஆம் திகதி இவ்விழா கொண்டாடப்படுகிறது.

யூதருக்கு இடறலாகவும், கிரேக்கருக்கு மடமையாகவும் இருந்தது சிலுவை. அவமானத்தின் சின்னமான சிலுவை மீட்பின் சின்னமாகக் கிறிஸ்துவால் மாற்றப்பட்டது. இச்சின்னமே ஒவ்வொரு கிறிஸ்தவனின் இல்லத்திலும் அவனை வரவேற்கும் சின்னமாக அமைய வேண்டும்.

''குருசைக் கண்ட பிசாசுபோல் ஓடுகிறான்'' என்று முதுமொழி ஒன்று உண்டு. தீமையான அனைத்தையும் மேற்கொள்ளவல்லது சிலுவை.

யூதருக்கு சிலுவை இடறலாக இருந்தது. ஏனெனில் குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் அதி உயர் தண்டனையாக அது கருதப்பட்டது. இத்தகைய தண்டனையைத் தங்கள் மெசியாவும், மீட்பரும் ஆண்டவரும் பெற்றுக் கொள்வதை அவர்கள் கண்டு இடறல்பட்டனர்.

கிரேக்கர் உலக ஞானத்தையும், வல்லமையையும், அதிகாரத்தையும் மகிமையையுமே போற்றி வந்தனர். ஆன்மீக ரீதியான சிந்தனை அனைத்தும் உலகை வெறுத்து சம்பந்தமற்றதாகவே அவர்கள் கருதினர். எனவே அவர்களுக்கு சிலுவைதான் மீட்பு என்பது மடமையானதாகத் தென்பட்டது.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இந்த அவமானத்தின் சின்னமான சிலுவையே மீட்பின் சின்னமாகவுள்ளது. ஒரு கிறிஸ்தவன் முதலில் படிக்கும் மந்திரம் சிலுவை அடையாளம். பரிசுத்த சிலுவை அடையாளத்தை வரைந்து பரிசுத்த திரித்துவத்தையும் வழிபடுகின்றோம். சிலுவையை எப்போதும் அரவணைப்போம்.

''என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன் அன்றாட சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லட்டும்'' என கிறிஸ்து அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பை ஏற்றே அவரைப் பின் தொடர்கிறோம். ''என் நுகம் இனிது என் சுமை எளிது'' எனக்கூறும் கிறிஸ்து நம் வாழ்வின் சுமைகளை இலகுவாக்குகின்றார்.

மனித விடுதலையே முதன்மையானது யேசு சிறைப்பட்டோருக்கு விடுதலையும் ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைவாழ்வும் கொடுக்கவே வந்தார். 'ஆலயம் தொழுவது வேலை மினக்கேடு' எனப்போரும் உளர்.

இவ்வாண்டு லத்தீன் அமெரிக்க விடுதலை இறையியலாளர் அருள்திரு குஸ்டாவோ குட்டியரஸ் ''விடுதலை இறையியல்'' என்ற பதத்தைத் தொகுத்து 21 ஆண்டுகள் நிறைவாகின்றன.

மனித விடுதலையில் ஈடுபடாத கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமற்றது. அதனையே லத்தீன் அமெரிக்க, ஆயர்களும் குருக்களும் உணர்ந்தவர்களாக, விடுதலை இறையியலை வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் உலக நோக்கோடு மட்டும் நாம் வாழ்வோமாயின் எமது வாழ்வுக்கு பூரண விளக்கம் கொடுக்க முடியாது. கிறிஸ்துவையும் அவரது பாடுகளையும் அவரது சிலுவையையும் மறந்து மறுத்து ஒரு விடுதலையைப் பெறுவது இயலாத காரியம்.

மனித விடுதலைக்காக உழைப்போம். அதே வேளை மனிதன் எத்தகைய சுபீட்சமான வாழ்விலும், சிலுவையிலிருந்து தப்பித்துவிட முடியாத நிலையை உணர்ந்தவர்களாக, அச்சிலுவையை மீட்பின் அருட்சாதனமாக மாற்றி அதனால் பலனடைவோம்.

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ் சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.**

## தேவ நற்செய்தி

**ஆண்டின் 23—ம் ஞாயிறு (10-09-89)**

### துறவு இல்லையேல்

பகவத் கீதை சொல்லும் யுத்தம், மனிதன் மனதில் நிகழும் ஒரு வாழ்க்கைப் போராட்டமாகும். போர்க்களத்தில் மாவீரன் அர்ச்சுனனுக்கு எதிரே அவனது பகைவர்களாக அவனது சொந்த இரத்தமே படையெடுத்து நின்றது. தன் மச்சான்மார், மாமன்மார் எனத் தனது சொந்தம், பாசம் அத்தனையையும் அம்பால் கொன்று வீழ்த்துவதா ...? அவனது மனம் சஞ்சலமடைந்து தன் வில்லைக் கீழே போடும் போது கிருஷ்ணன் மனச்சாட்சியாக நின்று வழி காட்டுகிறார். ''பற்றற்ற நிலையில், கொண்ட இலட்சியத்தை நிலைநாட்டுவதே-கடமை, பக்தி ...'' என்கிறார். புத்த பெருமானும் தன் போதனையில் துன்பத்தின் காரணம் ஆசை, அதைத் துறப்பதுதான் ஒரே வழி என்றார்.

சிலுவைதான் சீடத்துவத்திற்கு ஒரே பாதை என்கிறார் யேசு. அவரைப் பின்பற்ற தன் தந்தை, தாய் மனைவி, மக்கள், சகோதரர்கள் ஏன் தன் உயிரையுமே வெறுக்க வேண்டும் என்று இயேசு நிபந்தனை விதிக்கும் போது நீங்கள் உலகத்தில் வாழ்கிறீர்கள். ஆனால் உலகத்தைச் சார்ந்தவரல்ல என்பதே பொருள். ''சொந்தங்களும், பந்தங்களும் பிரித்தாலும் பிரியாதது ...'' என்று பாடுகின்றான் கவிஞன் ஒருவன். சொந்த பந்தங்களைத் துறப்பது என்னும் போது யாவருடனும் பகைவராவது என்பது அல்ல, யார்மட்டிலும் பொறுப்பற்று வாழ்வது என்பதுமல்ல, அளவற்ற பற்றும், ஆசையும் வளரும்போது அன்பு அல்ல மாறாக அடிமைத் தனமே தலைதூக்குகின்றது.

புனித சின்னப்பர் சிறையில் வாழும் போது தப்பி ஓடி வந்த அடிமையான ஒனேசிமுவைச் சந்தித்து, அவனை கிறீஸ்தவனாக மனம் மாற்றுகிறார். அவனைத் தன் சொந்த பிள்ளை போன்று உறவில் நெருங்கினாலும், தனக்குப் பணிபுரிய தன்னோடு வைத்திருக்க ஆசைப்பட்டாலும், கூட அனைத்தையும் தியாகம் புரியும் பற்றற்ற நிலையை அடைந்து விட்டதைப் புனித சின்னப்பர் வாழ்வில் காண்கிறோம்.

எவர் மீது வைத்திருக்கும் அன்பும், பற்றும் எங்களை அடிமைகளாக மாற்றாமலும் எம்மைத் தாழ்நிலைக்குத் தள்ளாமலும் எம்மைச் சுதந்திர புருஷர்களாக உருவாக்க வழி செய்ய வேண்டும்.

கிறீஸ்துவை அன்பு செய்வதும், அவர் சீடனாய் வாழ்வதும் ஒரு பெரும் சவால். எம் சுயவிருப்புக்களையும், அளவுக்கு மீறிய பற்றுக்களையும், பந்தங்களையும் களைய வேண்டும்.

கோபுரங்கட்ட விரும்புபவன் உட்கார்ந்து அதற்கான செலவைக் கணக்கிடுவது போலும், போர் தொடுக்க விரும்புபவன் தன் பலத்தை ஆராய்வது போன்றும், கிறீஸ்துவின் தகுதியுள்ள சீடன் தன் உறவு நிலைகளை கணிப்பீடு செய்ய வேண்டும். இறை அன்பிற்குத் தடையாய் இருக்கும் எதுவும் என் வளர்ச்சிக்கோ, அயலவர் வளர்ச்சிக்கோ முறையானதல்ல.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

ஞான. 9: 13-19 ஆண்டவர் விரும்புவதைக் கண்டுபிடிப்பவர் யார்?

பிலமோ. 9-17 அன்புச் சகோதரனாய் ஏற்றுக் கொள்ளும்.

லூக். 1 : 25-33 துறவு இல்லையேல் சீடராக முடியாது.

தமிழர் தம் பாரம்பரிய கலைகளை மங்கிமறைந்து விடாமல் வளர்த்தெடுப்பதில் அக்கறையுடன் உழைத்துவரும் திருமறைக் கலாமன்றத்தினரால் அதி. வண. சாகோ அ. ம. தி. அடிகள் அவர்களின் வரவேற்பை முன்னிட்டு ''அமலமரித் தியாகிகள்'' எனும் நாட்டுக் கூத்து நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. அ. ம. தி அடிகள் அவர்களின் வரவேற்பில் மறைமாவட்ட முதற்குரு வண. மைக்கல் சுவாமி வண. பிதா. லூயிஸ் பொன்னையா, வண. பிதா R. மைக்கல் ஜோசவ், டாக்டர் J. P. C. பீரிஸ் திருமதி. மனுயலா சிங்கராஜர், விழாநாயகன் அதி. வண. சாகோ ஆகியோருடைய சொற்பொழிவுகளும், வண. ஜெபநேசன் அவர்களின் நன்றியுரையும் இடம்பெற்றன. தொடர்ந்து இடம்பெற்ற நாட்டுக்கூத்து நிகழ்ச்சி 45 நிமிடத்தில் சுருக்கமான முறையில் சிறப்பாக அமைந்திருந்தது.

திருமறைக்கலாமன்றம் அளிக்கும் ''அமலமரித்தியாகிகள்'' என்ற திரை உரையுடன் அண்ணாவி சாமிநாதன் அவர்கள் நாட்டுக் கூத்து மரபின்படி மேடைமுன் சந்தத விருத்தம் பாடினார். முதற்காட்சியாக சங்கிலி அரசனின் மனைவி தன் மைந்தனை கிறிஸ்தவ மதத்தை விட்டுச் சைவ சமயத்திற்கு வரும்படி புத்திகூறும் காட்சி இடம் பெற்றது. மிருதங்க ஒலியுடனும், நாக்குவாத்திய (ஆர்மோனியம்) ஒலியுடனும் பக்கப்பாட்டு இடம் பெற்றமை காட்சிக்கு மெருகூட்டியது. காட்சி அமைப்பு சிறப்பாக அமைந்திருந்ததுடன் பெண் பாத்திரம் ஏற்று நடித்த பெண்மணியின் பாத்திரம் குறிப்பிட்டுப் பாராட்டும் வகையில் அமைந்தது.

அடுத்த காட்சியாக அமைந்த அரண்மனைக் காட்சியில் சங்கிலிய மன்னன், தன் மகன்

## கலை நிலா

### ''அமலமரித் தியாகிகள்'' நாட்டுக்கூத்து —ஒரு நோக்கு

கிறிஸ்தவமதத்தைத் தழுவி மீண்டும் சைவமதத்திற்கு வரத்தவறியமையால் கோபம் கொண்ட காட்சியும் கல்வெட்டும், சிந்துவின் கடைசிப்பாடலான,

''ஏதேதிந்த தீது செய்ய
சூசு செய்ய
எத்தனை நாள் காத்திருந்
தான்
மெத்தவும் கறுவங் கொண்டு
சித்தமது மாறி விட்டான்''

என்ற பாடலும் அரசனின் பாத்திரத்தை உள்ளத்திற் பதியச் செய்தன. கோபம் கொண்ட அரசன் தன் மகனையும், கத்தோலிக்க மக்கள் அனைவரையும் மன்னார் முதல் மாதோட்டம்வரை சிரச்சேதம் செய்தபின் கிறிஸ்தவ மதம் இருளடைந்த நிலையில், றோம் நகரில் இருந்து குருமார் கப்பலில்வரும் காட்சியில்,

''ஏலே ஏலோம்
ஏலேலோம் ஏலே ஏலோம்
காற்றுவழி ஏலே லோம்
சீற்றமில்லை
கடுகி வலி தோழரே
கரையடுப்போம்
ஏலே ... லோம் ...
ஏலேலோம் ...ஏலேலோம்

பாடலுடன் அமைந்த காட்சி புதுமுறையாக அமைந்தமை வரவேற்கத்தக்கது! பண்டைய நாட்டுக் கூத்து வழிவந்த மரபில் இம்முறை முதன் முறையாகிஇங்கு கையாளப்பட்டுள்ளது.

இக்காட்சியில் கப்பலில் வந்த றோம் நகர் அமலமரித் தியாகி குருவாகப் பாத்திரமேற்றவர் தமது பாத்திரத்தைச் செவ்வனே செய்திருந்தார். இவரது பாடலின் இசையில் சிறிது மாற்றத்தினை அவதானிக்க முடிந்தது.

தொடர்ந்து வரலாற்று ரீதியில் பணிகள் செய்த பன்மொழிப்புலவர் ஞானப்பிரகாசர், வண. பிதா லோங், ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆகியோரின் பாத்திரப் படைப்புக்களும்காட்சித் தொகுப்பும், பாடல்களும் பார்வையாளர்களை இந் நிகழ்வுகள் இடம் பெற்ற அன்றைய கால கட்டத்திற்கே அழைத்துச் செல்வனவாய் அமைந்திருந்தன.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் பழமை வாய்ந்த கலை வடிவமான நாட்டுக் கூத்தினூடாக திருமறைக் கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைக்கும் திருமறைக் கலாமன்றத்தின் பணி பாராட்டத்தக்கதே. அமலமரித் தியாகிகள் என்னும் இந்த நாட்டுக் கூத்து காலத்திற்கேற்ப மக்களைக் கவரக்கூடிய முறையில் இசையுடன் அமைந்துள்ளமை நாட்டுக் கூத்துக் கலையின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டான முயற்சியாகும்.

நா. விமலாம்பிகை
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வன்முறை, பயங்கரவாதம், போராட்டங்களினால் பாதிப்புற்றிருக்கும் இலங்கை மக்களுடன் நான் ஒன்றுபட்டிருக்கிறேன்'

## இலங்கை ஆயர்களுக்கு திருத்தந்தை அளித்த செய்தி (சென்ற இதழ் தொடர்ச்சி)

நீங்கள் தரிசனைக்கு வந்திருக்கும் இவ்வேளையில் இலங்கையின் அப்போஸ்தலர் எனப் பலரால் போற்றப்படும் ஆசாரத்துக்குரிய ஜோசவ் வாஸ் முனிவரின் வீரத்துவம் பொருந்திய புண்ணியங்களையும், மறைப்பணி ஆர்வத்தையும் நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன், அத்துடன் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக உங்கள் மக்கள் மத்தியில் நற்செய்திப் போதகத்திற்கும், இறையரசின் வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணத்த எத்தனையோ மறைபோதகக் குருக்கள், கன்னியர், துறவியர் ஆகியோரின் வீரஞ்செறிந்த உழைப்பை நினைவுகூர்ந்து இறைவனுக்குப் புகழ்ச்சியும் நன்றியும் செலுத்துகிறேன்.

உங்கள் நாட்டின் எதிர்கால மறைபோதக நடவடிக்கை பற்றி எனக்கு ஆழ்ந்த, நிலையான நம்பிக்கை உண்டு. யோசவ் வாஸ் முனிவரின் சாதனைகள் தற்காலத்தவர்க்கு தூண்டுதலளிக்கும் ஒரு காரணியாகவும், இலங்கையில் இதுவரை மீட்பின் நற்செய்தியைக் கேட்டிராதவர் அல்லது அதனை ஏற்றிராதவருக்கு அதனைப் போதிக்க ஓர் அழைப்பாகவும் இருக்குமெனக் கருதுகிறேன். உங்கள் சமுதாயத்தில் நற்செய்தியைப் போதிப்பதற்கு மறைபோதகரும், உங்கள் சொந்த நாட்டைச்சேர்ந்த குருக்கள், துறவியர், உபதேசிமார்களும் மேற்கொண்ட பல முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன். இலங்கையின் முழுத் திருச்சபையும் உண்மையில் ''புறவினத்தாருக்கு இருளகற்றும் ஒளியாக' (லூக் 2;32) விளங்கவேண்டுமெனப்பிரார்த்திக்கிறேன்.

அன்புச் சகோதரரே! பல மதங்கள் உள்ள ஒரு சமுதாயத்தில் நற்செய்தி பரப்புவதற்கு மிகப் பொருத்தமான வழிவகைகளைத் தேர்ந்தெடுப்பது உங்கள் பொறுப்பாகும். கிறிஸ்தவமல்லா மறைகளின் மட்டில் திருச்சபை ஓர் ஆழ்ந்த மதிப்புக் கொண்டுள்ளது. ஏனெனில் ''ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இறைவனைத்தேடியதன் எதிரொலி அவற்றில் காணப்படுகிறது. இத்தேடுதல் நிறைவுபெருத ஒன்றாயினும், அது பெரும்பாலும் உண்மையுடனும் உள்ளத்தில் நேர்மையுடனும் செய்யப்பட்டதாகும்'' (E. N.53) இந்த மதங்களிற் காணப்படும் ஆன்மீக, அறநெறிப் பண்புகளே பரஸ்பர உரையாடலுக்கும் சமாதான சுகவாழ்வுக்கும் அடிப்படையாக உள்ளன, ஆயினும் கிறிஸ்தவமல்லா மறைகளோடு உரையாடல் நடத்துவதென்ற திருச்சபையின் நிலையானது, நற்செய்திப் போதகமென்ற அதன் இன்றியமையாப் பணியை எவ்விதத்திலும் மாற்றுவதில்லை சொந்த முன்மாதிரியின் மூலம் சான்றுபகர்வதுடன், எமது விசுவாசத்தின் அடித்தளமும், எமது நம்பிக்கையின் காரணமும், எமது அன்பின் ஊற்றுமாக இருக்கின்ற கிறிஸ்துவை எப்போதும் அறிவிக்கவே வேண்டும். (கிறிஸ்தவரல்லாதோருக்கான செயலகத்திற்கு - 28 சித்திரை 1987-ல் ஆற்றிய உரை)

இலங்கைத் தலத்திருச்சபையின் ஆயர்களென்ற முறையில் 8 மேய்ப்புப்பணியில் உங்கள் செயற்பாட்டை இரு அடிப்படைகளில் ஒழுங்குபடுத்தியிருக்கிறீர்கள் முதலாவது நாட்டிலுள்ள பௌத்தசமயத்தவருடனும், பிற ஆன்மீக குழுக்களுடனும் உரையாடல் நடத்தி. இம்மதங்களிலுள்ள உண்மையைக் கண்டுணர்ந்து மீட்பின் நற்செய்தியை அறிவிப்பதற்கு வழிசெய்துள்ளதோடு நற்செய்திப்பணிக்கு துணைபுரியும் பொருட்டு ஓர் பண்பாட்டுமயமாக்கும் திட்டத்தையும் மேற்கொண்டிருக்கிறீர்கள் இரண்டாவதாக மேய்ப்பில் மிகுந்த கரிசனையோடு உங்கள் சொந்த கத்தோலிக்க விசுவாசிகளுக்கு உங்களை அர்ப்பணித்து, திருவார்த்தையினலும் திருவருட்சாதனங்களினலும் அவர்களுக்கு ஊட்டமளித்து அவர்களது மனித முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி இல்லாதோரைப் பராமரித்து வருகிறீர்கள். இவ்விதமாக அவர்கள் மத்தியில் நல்ல ஆயனுடைய வேலையைச் செய்திருக்கிறீர்கள்.

உங்கள் வார்த்தைகளை விரும்பிக் கேட்போருக்கு இயேசு கிறிஸ்துவையும் அவரது திருவருட் பேறுகளையும் போதிக்கும் உங்களது பணியில் நான் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். ஏனெனில் பெந்தெகோஸ்தே நாட்காலை முதல் கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் அறியாதோருக்கு வெளிப்படுத்துவத திருச்சபை தனது நறுவுநரிடமிருந்து பெற்றுக் கடைப்பிடித்துவந்த அடிப்படைத் திட்டமாகும் (E.N.15)

அன்புச் சகோதரரே! நீங்கள் இலங்கையிலுள்ள இறைமக்களுக்கு ஆர்வத்துடன் ஆற்றவரும் பணிக்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். உங்களையும் உங்கள் நாட்டிலுள்ள திருச்சபை முழுவதையும் இலங்கைநாயகியான மரியன்னையின் ஆதரவில் ஒப்படைத்து, அவளது திருக்குமாரனது அருளையும் அமைதியையும் உங்கள்மீது பொழியுமாறு வேண்டி, உளங்கனிந்த எனது அப்போஸ்தலிக்க ஆசியை வழங்குகின்றேன்.




புனித கிளாவர் இராயப்பர் - செப்டம்பர் - 9

[கி. பி. 1981 - 1654]

இவர் ஸ்பெயின் நாட்டில் 1580ம் ஆண்டுவெர்ட்யூ என்ற இடத்தில் பிறந்தார். 1596 இல் பார்சலோனு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தார். 1602ம் ஆண்டு யேசு சபை குருமட மாணவனைச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1616-ல் குருப்பட்டம் பெற்றபின் புதிய உலகில் நீக்ரோ அடிமைகளிடம் தமது திருப்பணியை ஆர்வமுடன் தொடங்கினர். நீக்ரோக்கள் மத்தியில் உற்ற நண்பனாகவும் மருத்துவராகவும் போதிப்பவராகவும் சுருங்கச் சொன்னால் அனைத்திலும் அனைத்துமாகவும் நடந்து கொண்டார். இவர் அவர்களுக்கு காட்டிய அன்பினால் அவர்கள் கிறீஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்டார்கள். 1654 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள் உழைப்பின் களைப்பால் உயிர் நீத்தார். 1888 ஆம் ஆண்டு பாப்பு 13-ம் ஆம் சிங்கராயர் இவருக்கு புனிதர் பட்டம் அளித்து இவரை ''நீக்ரோ உலகின் பாதுகாவலர்'' என அறிவித்தார்.

புனித கிறிசோஸ்தம் செப்டம்பர்-13 (கி. பி.349407)

இவர் அந்தியோக்கியா நகரில் பிறந்தவர். தமது படிப்புகளை முடித்தபின் கடுந்தவ வாழ்க்கையை மேற்கொண்டார். குருப்பட்டம் பெற்றபின் 397 இல் ஆயராகுமாறு திருமறை அதிகாரிகள் கட்டாயப் படுத்தி அப்பதவியை ஏற்கச் செய்தனர். இவர் தவமே உருவெடுத்தவராக வாழ்ந்தார். உடல் நலங் குன்றியவராக காணப்பட்டாலும் சொல்வன்மையில் வல்லுநராகத் திகழ்ந்தார். அரச குலத்தினரிடம் இருந்த தவறுகளையும் அநீதிகளையும் அம்பலப்படுத்தினர். இதனால் நாடுகடத்தப்பட்டார். அரசகுலத்தினரும், பிரபு, குலத்தினரும் தங்கள் சொத்துக்களை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று முழக்கமிட்டவர், தனது 52 வது வயதில் கொமேனு என்ற இடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

திருச்சிலுவையின் மகிமை செப்டம்பர்-14

614 ஆம் ஆண்டு பெர்சியா தேசத்து அரசன் மூன்று பெரும் படைகளை திரட்டி மெசப்பொத்தேமியா நாட்டிற்குச் சென்று அதை வென்று கணக்கில்லா கிறிஸ்தவர்களையும் குருக்களையும் கன்னியரையும் வதைத்துக் கொன்றான். லட்சக்கணக்கான கிறிஸ்தவர்களை யூதருக்கு அடிமைகளாக விற்றுவிட்டுத், தேவாலயங்களை கொள்ளையடித்தான், எருசலேமிலிருந்த திருச்சிலுவையும் எடுத்துச் சென்றான். இதைக் கண்ட புண்ணியம் நிறைந்த கொன்ஸ்தாந்திநோபிளின் அரசன் ஹெராக்கிளியஸ் பெர்சியா தேசத்தின் மீது படையெடுத்து அவர்களை [illegible] 627 ஆம் ஆண்டு [illegible] சிலுவையை அவர்களிடமிருந்து மீட்டுக் கொண்டுவந்தார். 629 ஆம் ஆண்டு குறித்த நாளில் ஏராளமான விசுவாசிகள் ஒன்றுகூடி சங்கீதம் பாடிக் கொண்டும் ஜெபித்துக் கொண்டும் சென்றனர். அரசன் ஏழையின் கோலம் பூண்டு சிலுவையை சுமந்து சென்று தேவாலயத்தில் நிலைநாட்டினன் (அரச உடையில் சிலுவை சுமந்தபோது அதிக பாரமாக இருந்தது )

புனித கொர்னேலியுஸ் செப்டம்பர்-16

பாப்பரசர் புனித பபியான் கொல்லப்பட்ட பிறகு 14 மாதங்கள் வேதகலகம் தணியாமல் இருந்தது. இதனால் புதிய பாப்பரசர் தெரிந்து கொள்ளப்படவில்லை. இந்த இடைக் காலத்தில் திருச்சபையைக் ''குருக்களின் குழு'' ஒன்று பரிபாலித்தது பின்னர் அனைவருடைய விருப்பத்தின் படி கொர்னேலியுஸ் பாப்புவாக தெரிந்தெடுக்கப்பட்டார் என புனித சிப்பிரியன் குறிப்பிடுகிறார். பின்னர் இவர் சிவிட்டாவெக்சியாவுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கு கி. பி. 235 ஆம் ஆண்டு இறந்தார்.

S. S. கருணைதாஸ்

[illegible]

கொழும்புத்துறை

# பங்குத்தளங்களில்...

### செட்டிகுளம்

பசுமை நிறை வயல்களினால் சூழப்பட்டு செட்டிகுளக் கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் புனித அந்தோனியாரின் பெருவிழா ஆனித் திங்கள் பதின்மூன்றும் நாள் பங்குத் தந்தை அருள்திரு. வடிஸ்லாஸ் அடிகளின் தலைமையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இப்பெருவிழாவின் நவதின வழிபாடுகளுக்கான மறையுரைகளை அருள்திரு. ஜீவாபோல் வழங்கி வழிபாடுகள் உயிரூட்டமுள்ளதாக்கினர். ஒன்பது நாட்கள் வழிபாடுகளிலும் ஒன்பது கருத்துக்களை மையப் பொருளாக வைத்து அருளுரையாற்றி வாழ்க்கையோடு ஒட்டிய சிந்தனைகளைப் பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார். அத்துடன் இந்நாட்களில் சிறுவர் தினம், இளைஞர் தினம், பெற்றோர் தினம், மறையாசிரியர்கள் தினம் என்று நாட்கள் குறிக்கப்பட்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இக் கருத்தரங்குகளை அருள்திரு. ஜீவாபோல் நடாத்தினர். இங்கு பரிமாறப்பட்ட கருத்துக்கள் யாவும் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் விதைத்த நல்ல பலன் தரும் விதைகளாகவே அமைந்தன.

✶

### நூரளைப்பங்கில்

நுவரெலியா மறைக் கல்வி நிலையத்தில் ''திருவழிபாடும் நாமும்'' என்ற கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நுவெரலியா, இராகலை, ஹட்டன், மஸ்கெலியா, தலவாக்கொலை, பூண்டுலோயா, மட்டக்கெலே, கவுலகேன என்னும் பங்குகள் கலந்து கொண்டன.

இக்கருத்தரங்கில் முதல் அம்சமாக எமது மறைக்கல்வி அதிபர் அருள்திரு ஆபிரகாம் அடிகள் திருப்பலியை ''எவ்வாறு வாழுதல்'' பற்றி உரையாற்றினர்.

மற்றும் விசுவாசப்பிரமாணத்தின் முக்கியத்துவம் சங்கீதங்களின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கம் தரப்பட்டன.

இறுதியாக சங்கைக்குரிய சகோதரி அந்தோனியா திருப்பலியின் மகத்துவம் பற்றி உரையாற்றினர். உரையாற்றுகையில் திருப்பலி என்றால் 'இறைமக்கள் இறைமகனோடு சேர்ந்து இறைவனுக்கு செலுத்தும் வழிபாட்டு திருப்பலியாகும்' என்றார்.

அன்று கல்வாரி மலையில் நடந்தேறிய பலியே இன்று நாம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலிக்கு ஆதாரமாக இருக்கிறது என்றும், சிலுவைப் பலிக்கும் திருப்பலிக்கும் உள்ள தொடர்பை விளக்கினர்.

திருப்பலியானது பரம அன்பின் பிணைப்பு, பாஸ்கா விருந்து எல்லாவழிபாடுகளிலும் தலைமையானதும், சிகரமானதுமாக விளங்குகின்றது எனவும் குறிப்பிட்டார். கருத்தரங்கானது திருவழிபாட்டின் மகத்துவத்தை அறியவும் எமது சமுதாயத்தில் திருப்பலியை அர்த்தமுடன் வாழவும் வழிவகுத்தது.

(மெர்லின் ரட்ணமலர்பிள்ளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவும் படையல்களும்

அன்னம்மாக் கிழவி செத்துப்போய்விட்டாள். சாவீடெல்லாம் அமர்க்களமாக நடைபெற்றது. கிழவிக்குப் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், எல்லாம் சேர்ந்து ஒரு டசினுக்கும்மேல், ஆனால் கிழவி உயிரோடு இருந்த காலத்தில், இவர்களுடைய, அன்போ, ஆதரவோ கிழவிக்குக் கிட்டவில்லை. ஆனால் கிழவியின் 'பெட்டி மூடப்பட்டபோது' எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து "உச்சஸ்தாயியில், குரல்கொடுத்தனர்—அது உலகின் ஒப்புக்காக.

★

மரியார்க் கிழவன் உயிரோடு இருந்தபோது கிழவி அடிக்கடி சொல்லும்.

"நீ போவதற்கு முன்னதாக நான் போய்விடவேணும். என்ரை பிள்ளைகள், நீ போனபிற்பாடு என்னைப் பார்க்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. என்ரை தாயார் பாரிசவாதத்தால் பாயும் படுக்கையுமாக ஆறுமாதம் வரை கிடந்தபொழுது நான பக்கத்தில் நின்று மலசலம் எல்லாம் எடுத்தனான். இப்படி 'இதுகள்' செய்யுமென்று நான் நம்பேல்லை."

ஆனால் நடந்ததோ கிழவியின் எண்ணத்துக்கு மாறாக மரியார்க் கிழவன் முன்னதாகப் போய்ச் சேர்ந்துவிட்டது. கிழவனின் சாவீட்டுச் செலவிற்காகக் கிழவியின் 'ஓட்டல்' தாலி விற்பனைசெய்யப்பட்டது. அதுவும் அந்தக் காலத்துப் பவுண். கிழவன் கடைசிவரை அதில் 'கை வைக்கவே இல்லை' எவ்வளவிற்கு விற்கப்பட்டது; எவ்வளவு செலவிடப்பட்டது; மிகுதி எங்கே, என்ற விபரங்கள் கிழவிக்கு சாகும்வரை தெரிவிக்கப்படவில்லை. கிழவன்போன பிற்பாடு கிழவியின் ஐந்து மக்களுக்கிடையே போட்டி ஏற்பட்டது அந்தப் போட்டியானது கிழவியைப் பார்ப்பதற்காக அல்ல, அதிலிருந்து விடுபடுவதற்காகத்தான். பென்ஷன் எடுக்கும் வயோதிபப் பெற்றோர் என்றால் "நான் பார்ப்பன்" என்று பிள்ளைகள் போட்டி போடுவர். ஆனால் இறுதியில் கிழவியின் மூத்த மகன் சாமிநாதன்வீட்டில்தங்க வேண்டிய நிலை உருவானது.

★

இன்று கிழவி செத்து மூன்றும் நாள் என்று செலவுக்கும் படையலுக்குமான ஆயத்தங்கள் தடல்புடலாக நடைபெறுகின்றன. உண்மையில் கிழவி செத்து இன்று நாலாம் நாள் ஆகின்றது. கிழவி படுக்கைக்குப்போன பின்னர், பத்து மணியளவில் காலமாகிவிட்டது. மறுநாட்காலை சாமிநாதன் வழிவந்த மூத்தபேத்தி "இந்தா நயின்ரி தேத்தண்ணி எடுத்துக்குடி" என்ற வழக்கமான குரலில் சொல்லிவிட்டுத் தேநீரை அருகில் வைத்துவிட்டுப் போய்விட்டாள். வழக்கமாகப் பேரப்பிள்ளைகள் கிழவியை 'நயின்ரி' என்றுதான் அழைப்பதுண்டு. அன்று கிழவி ஏழரை மணிவரை எழுந்திருக்கவில்லை. கிழவி எழுந்து வந்து, வழமையான காலைக்கடன்களை முடிக்காமையால், மூத்த மருமகள் கிழவியின் அறைக்குட் சென்று, தேநீரைத் தொட்டுப் பார்த்தாள். அது குளிர்ந்து போயிருந்தது. பின்னர் கிழவியைத் தொட்டுப் பார்த்தாள், அதுவும்...

★

இன்று செலவு, எல்லோரும் ஆரவாரப்படுகின்றனர். இதில் முக்கிய சடங்காகப் படையல் இடம்பெறுகின்றது. இதில் கிழவி சாப்பிட்ட, அல்லது, குடித்த உணவுப் பொருட்களும், ஏனைய பொருட்களும் களும் இடம்பெறவேண்டும், இவையெல்லாம். தலைவாழை யிலையில் படைக்கப்படவேண்டும். என்பது வழமையாகும். சுருட்டுக் கட்டொன்று இலையில் வைக்கப்பட்டது சுருட்டென்றால் கிழவிக்கு அலாதியான பிரியம். மரியார்க் கிழவன் உயிரோடு இருந்த காலத்தில், வேலையால் வரும்போது, ஒரு புழுப்புகையிலை வாங்கி வந்து சுருட்டிச், சுருட்டுகளைக் கிழவிக்கும் கொடுக்கும். கிழவன் போன பிறகு, கிழவி சுருட்டுக்காகக் கஷ்டப்படவேண்டியிருந்தது — எல்லாம் பழக்க தோஷம்.

வீட்டில் கிழவி சுருட்டுக் கேட்டால் அல்லது புகையிலை வாங்கித் தரும்படி கேட்டால்

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

வே. சாமுவேல்
தெல்லிப்பழை

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

"கிழவிக்குச் சுருட்டில்லாமல் இருக்கேலாதாக்கும்" என்று வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும்எரிந்துவிழுவார்கள். ஆனால் கிழவியின் பிச்சைச் சம்பளத்தைக், கிழவியின் பெருவிரல் அடையாளம் பெற்று மாதாந்தம் எடுத்து வந்தான் சாமிநாதன். எடுத்துக்கொண்டு வரும் வழியில் அரைவாசியைக் கரைத்துவிடுவான். பிச்சைச் சம்பளம் எந்த விதத்திலும் கிழவிக்குச் சுவறியதில்லை.

சுருட்டுப் பிரச்சினையைச் சமாளிக்க, கிழவி வேறொரு வழியைக் கையாண்டாள். ஐந்தாறு வீடுகள் தள்ளி 'வெள்ளச்சி கடை' இருந்தது. அது சரக்குக் கடையாக இருந்தபோதிலும் அங்கு மதுபானமும் விற்பனை செய்யப்பட்டது. அங்கு வருபவர்களில் அநேகர் அத்துடன் சுருட்டையும் பற்றுவர். கிழவி, கடைக்கு முன்னால் ஒய்வெடுப்பதுபோலக் குந்தியிருந்து இரகசியமாகக் 'குறைச் சுருட்டெல்லாம்' எடுத்துக்கொண்டு சென்று இரவிரவாகப் புகைத்துவிடும். இன்று, செத்த கிழவிக்கு படையலில் ஒருகட்டுச் [illegible]

கோழியும் ஆடும் அடிக்கப்பட்டு அவற்றின் இறைச்சியும் படையலில் இடம்பெறுகின்றன கிழவன் உயிரோடிருந்த காலத்தில் ஒவ்வொரு முழுக்கு நாளிலும் ஏதாவது இறைச்சியோடு வந்து சேர்ந்துவிடும். பிள்ளைகளிடம் எந்தவிதமான உதவியையும் கிழவன் பெற்றதில்லை. எதிர்பார்க்கவுமில்லை. அகப்பை செய்தல், திருகணை செய்தல், பெட்டி கடகம் இழைத்தல், என்பவற்றின் மூலமாகத் தனக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்று வந்தது சாமிநாதனோடு கிழவி இருக்கவந்த பிற்பாடு அது ஒரு

# சிறுகதை

நாளும் இறைச்சியைக் கண்டதில்லை ஒருநாள், கிழவி "கோழிக்குஞ்சொன்று காய்ச்சித் தா பிள்ளை" என்று தன் ஆசையை வாய்விட்டே கேட்டுவிட்டது. இதைக் கேட்ட பேத்திகள், "கோழிக்குஞ்சு தின்கின்ற மூஞ்சியைப் பார்" என்று கிழவியைக் கேலி செய்தனர். வயது செல்லச் செல்ல உணவை பொறுத்தமட்டில்சில ஆசைகள் எழுவதுண்டு. அன்று கேட்டுக்கொண்டபோது, கொடுக்கப்படாத கோழி இறைச்சியும், ஆட்டிறைச்சியும் இன்று படையலில் இடம் பெறுகின்றன.

படையலில் கூழும் இடம் பெறுகின்றது, ஒரு பாத்திரத்தில் கிழவிக்குக் கூழென்றால் மிகவும் பிரியமானதாகும். கிழவி ஒரு நாள் கூழ் காய்ச்சித் தரும்படி கேட்டபோது, மூத்த மருமகள் "இப்போது கூழ் காய்ச்சுவதற்கு செலவு சித்தாயம் என்னவென்று கிழவிக்கு எப்படித் தெரியும்" என்று புறுபுறுத்துக் கொண்டு போய்விட்டாள்.

படையல் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எதிர்வீட்டு முத்தம்மா அங்கே வந்தாள். "கிழவி செத்த இடத்தில்பாருங் காலொருசெம்புநீரும், ஓர் எரியும் எண்ணெய் விளக்கும் முப்பத்தொருநாள் வரைக்கும் வைக்கவேண்டும். அல்லாட்டிக் கிழவி அடிக்கடி வந்து கரைச்சல் கொடுக்கும்" என்று கூறி முடித்தாள். உடனே செம்பு நிறையத் தண்ணீரும் அதனருகே முப்பத்தொரு நாளைக்கு இரவும் பகலும் எரியப் போகிற எண்ணெய் விளக்கும் வைக்கப்பட்டன.

கிழவிக்குச் சலரோகம் பிடித்த பிற்பாடு, அது அடிக்கடி தண்ணீர் குடிப்பதற்குப் பகலில் மட்டுமல்லாமல், இரவிலும் அடிக்கடி தண்ணீர் குடிக்க எழும்பிச் செல்லும்." [illegible] என்று

அடிக்கடி சினந்துகொள்வார்கள், அங்கிருந்தவர்கள். ஏதோ தண்ணீரும் விலைக்கு வாங்கப்படுகின்ற பொருள் போல. மேலும் கிழவி சலரோகம் காரணமாக இரவில் அடிக்கடி வெளியே செல்ல நேர்ந்தது அப்படிச்செல்லும்போது, தன் கைவிளக்கை வெளியே கொண்டு செல்லும். இதற்கு எண்ணெய்க்காகக் கிழவி போராடவேண்டி இருந்தது. "இந்த எண்ணெய் விலையிலை கிழவி இரவிரவாக விளக்கெரிக்குது" என்ற குற்றச்சாட்டுத்தான். இன்று முப்பத்தொரு நாள் வரைக்கும் செம்பு நிறையத் தண்ணீரும், இரவும் பகலும் எரியப் போகின்ற எண்ணெய் விளக்கும் வைக்கப்பட்டுள்ளன.

எல்லாம் படைத்தாகிவிட்டன. கிழவி வெள்ளைச்சிகடையில் இருக்கும்போது இடைக்கிடை வெள்ளைச்சி, 'கிழவியின் கைகால் உளைவிற்காக' என்று மனம் இரங்கிச் சிறிதளவு மதுபானத்தைக் கொடுப்பாள். இச்செய்தியைக் கிழவியின் இளைய மருமகள் ஏற்கனவே அறிந்திருந்தாள். அவள் செய்திகளைச் சேகரிப்பதில் ஒரு 'ரேப் ரெக்கோடர்.' எனவே படையலில் குறை வைக்கப்படாது என்பதற்காகக் சாப்போத்தல் சாராயமும் இலை மீது வைக்கப்பட்டுள்ளது

படையலைக்கொண்டுசென்று வேலியோரத்தில் வைத்துவிட்டு ஆட்கள் பந்தலுக்குள் திரும்பிவிட்டனர். வேலியோரமாக ஓர் உருவம்செல்கின்றது. படையலை நோக்கி அது யாருமல்ல சாமிநாதனின் மூத்த மகன்தான்—கிழவியின் மூத்த பேரன். அவன் சாராயப் போத்தலைத் திறந்து 'மடக் மடக்' என்று குடித்துவிட்டு, மூடியை இறுக்கமாக மூடிவிட்டு, வெற்று போத்தலைக் கிடந்த இடத்தில் வைத்துவிட்டான். அதன்பின்னர் கோழி இறைச்சியையும் ஆட்டு இறைச்சியையும் 'லபக்' என்று விழுங்கித் தள்ளினான். பின்னர் ஒன்றும் அறியாததுபோலப் பந்தலுக்குள் சென்றான்.


அந்தப் போத்தலில் ஏற்கனவே 'கண்வைத்திருந்த, சாமிநாதன் படையலை நோக்கி வந்தான் அங்கே ஆட்டிறைச்சியையும், கோழியிறைச்சியையும் காணவில்லை. போத்தலை எடுத்துப் பார்த்தான், அதற்குள் ஒன்றும் இல்லை. ஆனால் மூடி மட்டும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தது.

"ஓ ஆவிகள் போத்தலைத் திறக்காமலேயே, உள்ளேயிருப்பதைக் குடித்துவிடக் கூடியவை' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பந்தலுக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

"ஊரெல்லாங்கூடி ஒலிக்க
அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று
பெயரிட்டு
சூரையங் காட்டிடைக்
கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினில் மூழ்கி
நினைப்பொழிந்தார்களே'

★

வயோதிபத் தாய் தந்தையர்களை, நன்றாகப் பராமரிக்கத் தவறுகின்ற ஒரு சமுதாயம், அதே வயோதிபத் தாய் தந்தையர்கள் இறந்த பிற்பாடு செலவு, படையல், போன்ற சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டுச் செலவு விருந்தில் பங்குகொள்ளுகிறது



# வாசகர் கருத்து



ஒவ்வொரு கிறிஸ்தவனும் மேலும் மேலும் இறைவனை அறிவதற்கும் கிறிஸ்துவைத் தாங்கிய புதிய மனிதனாக உருமாறுவதற்கும் முன்னோடியாகவும், வழித் தான்றலாகவும் அமைந்து வருகின்ற அற்புதப் படைப்புக்களாகிய குடும்பம் ஒரு கதம்பம், தேனருவி, சிறுகதை, உங்களுக்குத் தெரியுமா, வேதாகமப் போட்டி. சிந்தனைக்கு விருந்தளிக்கும் அருள் வார்த்தைகள், கவிதைகள், சிந்தனைச் சிதறல்கள் அனைத்தும திகட்டாத தேன்துளிகள். அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாகத் தொகுத்துத் தருகின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

பாதுகாவலனே

வாரந்தோறும் உமது வரவினை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் உமது வருகையோ அனைத்துக் கிறிஸ்தவர்க்கும் கிடைத்தற்கரிய வரப்பிரசாதம். பலன் தரும் உமது பணி தொடர என்றும் எமது வாழ்த்துக்கள்.

செல்வி:-
S. ரமணி ராஜரெட்ணம்
நாவாந்துறை/வடக்கு

★

28-7-89 இளைஞர் உலகத்தில் "வானத்தைப் பார்த்தேன் பூமியிற் தேடினேன் இறைவனைக் காணவில்லையே" என்றதோர் முறையீட்டைக் கண்டேன், நண்பனே! கண்கொண்டு பார்த்து கைகொண்டு தேடி, இறைவனைக் காணலாகுமா? அகிலாண்ட வியாபகத்தை அங்கு பூத்துச் சிதறிக்கிடக்கும்விண்மீன்களைக் கணித்துப் பார்த்ததுண்டா? இறைவன் கை வல்லமை மா

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
01-9-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்தவர்களுக்கு வாழ்க்கை அமைதியற்றவைகளாகவே அமைந்து விடும். ஆனால், எதிர்பாராமல் கிடைக்கும் எந்த மகிழ்ச்சியும் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகவே நிலைத்து நிற்கும்.

திருமண விழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்ற ஏனைய இல்விருந்து பசாரங்களில் அழைக்கப்பட்டவர்களிடமிருந்து அழைப்பு விடுத்தோர் எதிர்பார்ப்புக்கேற்ப பரிசுப் பொட்டலங்கள் அல்லது பணப் பரிசில்களோ கிடைக்கலாம். இதில் ஏற்படும் மகிழ்ச்சியைவிட,

—வீதியில் விபத்தில் சிக்கிய பாதசாரிக்கு கிடைக்கும் உதவி.

—ஏழை விவசாயிக்கு கிடைக்கும் சமூக மான்யம்.

—அகதிகளாய் அநாதையாக்கப்பட்டோர்க்குக் கிடைக்கும் சோற்றுப் பார்சல்.

—முதியோர் இல்லத்தில் தனிமையில் வருந்துவோருக்குக் கிடைக்கும் அன்புப் பரிமாற்றம்.

—ஐஸ்கிறீம் விற்பனுக்குக் கிடைக்கும் அமெரிக்க வீசா போன்ற எதிர்பாரா நிகழ்வுகள் மனதில் தோற்றுவிக்கும் மகிழ்ச்சி அளப்பரியது.

சமூக சம்பிரதாயங்களால் விளையும் மகிழ்வு நிலையற்றது. மாறாக, தியாக உணர்வால் உந்தப்பட்டு வெளிப்படுத்தப்படும் மகிழ்ச்சியே என்றும் நிலைத்துநிற்கும்.

வி. பி.

## அன்பின் வலிமை

அன்பு எனும் பொருள் அறிந்தோர்
அனைத்தையும் அறிந்தவரே
என்பும் உருகிடும் படியாக
ஏதேதோ வித்தைகள் செய்துவிடும்.

உறவுகள் அறுந்து விட்டால்
உதிரமே வடிக்கும் உள்ளம்
பிறவெதிலும் நாட்டம் இன்றி
பித்தனாய் அலையும் நெஞ்சம்.

அடிக்கடி பார்க்க வேண்டும்
அருகிலே அமர வேண்டும்
துடிக்குமே இதயம் தூரவே நின்றால்
தூங்காது கண்கள் பார்க்காது போனால்.

புன்னகை ஒன்று போதும்
பொழுதெல்லாம் இனிமை சேர்க்கும்
இன்னமும் தாமதித்தால் என்
இருகண்ணும் கலங்கிவிடும்.

''தமிழ் நேசன்''
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

## நாம் - இன்று

காலையில் வேலைக்கு துள்ளி எழும் நாம் - இன்று
வெயில் வந்து சுட்டும் எழும்பவில்லை.

மலர்ந்த முகத்துடன் பாடசாலை சென்ற நாம் - இன்று
அசடு வழிந்த முகத்துடன் பொழுது போக்க எண்ணுகிறோம்.

ஒன்று கூடி இறைவனைத் தொழுகின்ற நாம் - இன்று
கூடி நின்று ஊர்ப் புதினங்களை அலசுகின்றோம்.

பாடசாலையில் ஊக்கமுடன் படித்த நாம் - இன்று
படித்த பாடங்களையே மறந்து நிற்கின்றோம்.

கல்லூரியில் கதைப்பதனால் கவலைகளை தீர்த்த நாம் - இன்று
கவலைகளைத் தீர்ப்பதற்கு ஏங்குகின்றோம்.

படிப்பதனால் பட்டம் பெறுவோம் என நினைத்த நாம் - இன்று
பாதியிலே படிப்பை விட்டு பிற நாடு செல்கின்றோம்.

சுதந்திரமாய் வீதியிலே சென்ற நாம் - இன்று
சுருண்டு போய் வீட்டு மூலைக்குள் கிடக்கின்றோம்.

நீ. பாக்கிய றெஜினோல்ட்
47, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்

## இளைஞனே சிந்தி!

நாளைய சமுதாயத்தின் மகத்துவமிக்க மனிதர்களாக வாழவழிவகுக்கப்பட்ட இளைஞர் சமுதாயம் அவசர உலகின் அந்தகாரத்தினுள் சிக்கி ஓர் இருண்ட எதிர்காலத்தைக் கண்டு மிரண்டுபோய் நிற்கின்றது. வாழத்துடிக்கும் வாலிப உள்ளங்களில் ஏக்கத்தின் இருள்தான் விரவிக்கிடக்கின்றது.

சுயநலத்தின் உறைவிடமே! சுயநலத்தையும் உன்னையும் ஒன்றாகவே படைத்துவிட்டானோ இறைவன். உன்னிடம் அதிகமிருந்த அறிவினால் ஏமாற்றமுடிந்தவர்களையெல்லாம் ஏமாற்றினாய் நீ பின்னுகின்ற சுயநலச்சிலந்தி வலைச் சிந்தையில் பலியிடப்படுபவர்கள் எத்தனை பேர்? அன்று மலைமுகட்டில் கொடிபொறித்தாய் இன்று உன் அயலவனின் வாழ்வுக்கு குழி பறிக்கின்றாய் உன் கறுப்பு நெஞ்சில் கயமைத் தனங்களும் உதட்டில் தேனும் உள்ளத்தில் நஞ்சும் உன்னில் தலைவிரித்தாடத் தொடங்கினால் மிருகத்தைவிட கேவலமான நிலைக்குத் தள்ளப்படுகின்றாய்.

அன்பும் பண்பும் கருணையும் குடியிருக்க வேண்டிய உன் நெஞ்சில் கொடூர எண்ணமும் குறுகிய சிந்தைகளும் கொலுவுற்றிருக்கும் கொடுமையினைப் பார். வகைகெட்ட உன்வாழ்க்கையை ஆழப்பெருங்குழியில் புதைத்துவிடு. உன் வளங்கெட்ட வாழ்வைக்களைந்து, நிகழ்காலத்தில் நடக்கவிருக்கும் செயல் முறைகளை அவதானி. மானிட வாழ்நாளில் வனப்புமிக்க இளமை நாட்கள் நொண்டியாகி விடுவதென்றால் இதனை நீ எப்போது சிந்திக்கப் போகின்றாய்?


எனவே அன்டான இளைஞனே! கண்களை மூடிக்கொள்ளாதே. உன் மனக்கதவைத் திறந்து பார்; உன்காலத்தை வீணே கழிப்பவனே! உன் இழிநிலையைச் சற்றுச்சிந்தித்துப் பார், சீரியபாதையில் உனது கால்களை எடுத்து வைத்து நல்லதையே உனது வாழ்வில் பிரதிபலித்துக்கொள். இளைஞனே சிந்தி! அன்பில் வளர்ந்திடு அதன்மூலம் புதுஉலகம் படைத்திடு உன் பிறந்த மண்ணிலே உனக்குச் சீரியதோர் வாழ்வுண்டு. உன் வளமான தாயகத்திற்குப் புதுவழிதிற. தனி வழி காட்டு.

மாதகலூர், மா. ஜெறி

## சிந்திக்க!

* அரக்கரை அழிக்க அகல நிற்காதே.
  பிழையை எதிர்க்க பின் நிற்காதே.
* உரியதை உரிய நேரத்தில் செய். அது உன்னை உயர்ந்தவனாக்கும்.
* பேச வேண்டும் என்பதற்காகப் பேசாதே. பேச வேண்டிய நேரத்தில் மட்டும் பேசு.
* இலட்சியத்தை இழக்காதே அது உப்பில்லாத கறி போல் ஆகிவிடும்.
* தாரத்தை மறந்தாலும் உன் தாயை ஒருபோதும் வெறுக்காதே.

T. S. சத்தியானந்தன்
இளவாலை.




கடந்த வாரம் குறிப்பிட்டதைப்போன்று சில கடிதங்களையும் பத்து கட்டுரைகளையும் இனி பார்ப்போம்.

எல்லாக் கட்டுரைகளும் ஒரே தரத்தில் இல்லை. எல்லாக் கருத்துக்களும் புதுக்கருத்துக்களுமல்ல. எழுதுகின்ற எல்லோரையும் ஏற்றுக்கொள்ள அதில் உள்ள சில கருத்துக்கள் என்றாலும் வெளிவர, அவர்களின் எழுத்து ஆர்வம் வளர்க்கப்பட பல திருத்தங்கள் வெட்டுக்களுடன் பிரசுரிக்கிறோம்.

திருமணத் தயாரிப்பு என்ற பகுதி பற்றி பலரும் எழுதி இருக்கிறார்கள். பொதுவாக வரவேற்றிருக்கிறார்கள். ஒரே நீளக்கட்டுரையாக்கிய படியால் வாசிக்க முடியவில்லை. திருமறைத் தயாரிப்பிற்கு பாவிக்கும் படியாக சுருக்கித் தெளிவாக தரவில்லை என்ற கருத்துக்களும் தரப்பட்டன.

''உங்கள் கனவை நனவாக்குங்கள்'' வெளிவர ஆயத்தமாக உள்ளது. சேகரிக்கவும், வாசிக்கவும் ஆயத்தமாகுங்கள்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

## அறங்களில் சிறந்த அறம் இல்லறம்

குடும்ப வாழ்க்கை ஓர் சிறந்த அறமாகும். ஏனென்றால் குடும்பவாழ்வைத் தவிர்த்து ஏனைய அற வாழ்க்கைகளில் வாழ்பவர்களுக்கும், இக்குடும்பவாழ்வினரே உயிர்நாடியாவர். தன் கணவனின் வருமானத்திற்கேற்ப வாழ்வு நடத்தும் மனைவி கணவனுக்கு ஏற்ற துணைவியாவார். மனைவியில் அன்புகொண்டு பிறரிடத்தில் பரிவும் கொண்டு அவர்களுடன் பகிர்ந்துவாழ்தலே குடும்பவாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த பண்புகளாகும்.

குடும்பம் என்னும் கோவிலில் பிள்ளைகள் என்னும் கருபங்கள் இருக்கும். அந்தப்பிள்ளைச் செல்வங்களை விடச் சிறந்த எதனையும் நாம் மதிப்பதில்லை. எனவே பிள்ளைச்செல்வங்கள் மட்டில் மிகவும் அக்கறையோடு இருத்தல்வேண்டும். தளர்நடை பழகும் காலத்திலும் மழலை மொழிபேசும் காலத்திலும் இனிய சொற்களால் பழக்கி, கல்விகற்கும் காலத்தில் நல்ல கல்வியூட்டி பல்கலைக்கழகம் வரையில் கல்விகற்கும் வகையில் தூண்டுதல்வேண்டும்.

குடும்பங்கள் தனித்துவாழ முடியாது. மற்றவர்களின் அன்பிற்கும் இடம்கொடுத்தல் வேண்டும். இந்த உலகில் குடும்பநெறியில் அன்பு என்னும் நெறியையும் ஒருவர் நடத்துவாராயின் அதன்பயன் அவர் சுவர்க்க உலகத்தில் பெறும் பேரின்பமே என்று அறிஞர்கள் உரைப்பர். ஆம்! பகைவர் ஒருவர் தனக்குச்செய்த பாவத்தை மறப்பதற்கும், அன்புதான் காரணமாகும்.

'அன்பு' என்னும் பூவில் ஆயிரம் தேனீக்கள் வரும். அதுவே, குடும்பங்களில் அன்பு வழிவதைக் கண்டு இன்னொருவர் வந்தால் மனச்சந்தோசத்துடன் விரும்பி இனிதாகப்பார்த்து அவர்கள் அருகில் வந்ததும் மனப்பூர்வமாக இனிய சொற்களால் பேசுவதிலேயே சிறப்பான அறம் குடும்ப வாழ்வு என அறியவரும்.

கணவன் தன் மனைவியோடு சேர்ந்து இல்லத்திலிருந்து சேர்க்கப்படும் பொருட்கள் எல்லாம் விருந்தினரைக்காக்கும் பொருட்டே அவன் செய்வானானால் அவனது வயலில் வித்தும் இடல்வேண்டியதில்லை. ஏனென்றால் விருந்தினரை நல்லமுறையில் உண்பித்து மீதியைத் தான் உண்ணும் பழக்கம் கொண்டவனாயிருப்பதால், வந்த விருந்தினரைப் பேணிக்காத்து இனிவரப்போகும் விருந்தினரைக் காத்துக்கொண்டிருக்கும் இல்லறத்தான் தேவர்களுக்கும், சிறந்தவனாயிருந்து தேவர்களுக்கும், நல்விருந்தாளியாய் இருப்பான் என்று தெய்வப்புலவன் வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

அடக்கம் என்னும் பண்பு குடும்பங்களில் சிறந்து விளங்கவேண்டிய ஒன்றாகும். குடும்பவாழ்க்கையை நடத்துபவன் தனது இல்வாழ்விலிருந்து வேறுபடாமல் அடக்கத்தால் சகித்து வாழ்பவன் மலையினும் மிகவும் பெரியதாகக் கணிக்கப்படும்.

குடும்பங்களே! குடும்பஉறுப்பினர்களே!! சிந்தியுங்கள்... செயற்படுங்கள்... உங்களது வாழ்வே மேன்மைமிக்கது. பூவுலகில் வாழ்கின்ற உயிர்களுள் உங்களது அறத்தைத் தவிர்த்து ஏனைய அறங்களில் வாழ்பவர்களுக்கும், ஒளிமயமாகுங்கள். ஒவ்வொரு குடும்பமும், ஒற்றுமையாய்வாழ ஒன்றுபட்டு உழைக்க வாழ்த்துகிறேன்.

நியோகு சந்தியோகு.
புனித வளனார் O.M.I. குருமடம்.
யாழ். கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம், த. பெ. இல. 2. யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-31

### ஆகாய் 1

ஆகாய் என்றசொல் விழா, விருந்து, கொண்டாட்டம் என்னும் பொருளுடைய 'ஹாக்' என்ற எபிரேயச் சொல்லிலிருந்து வருகிறது. இறைவாக்கினர் ஆகாயின் வாழ்வுபற்றி சொற்ப விபரங்களையே இந்நூலில் காணமுடிகின்றது. எஸ்ரா 5: 1ல் ஆகாய், சக்கரியா என்னும் இறைவாக்கினர் பற்றிக் கூறப்படுகின்றது. ஆகாய் செருபாபேலின் தலைமையில் பாபிலோனியாவிலிருந்து யூதாவுக்கு திரும்பியவர்களுள் ஒருவராக இருக்கவேண்டும். இவர் ஆழமான விசுவாசமுடையவர். ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பி வழிபாட்டை அமைப்பதில் தீவிர ஆர்வம் கொண்டவர்.

சிருஸ் மன்னன் காலத்தில் பாபிலோனிலிருந்து நாடு திரும்பிய மக்கள் அழிக்கப்பட்ட ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினர். ஆனால் பின்னர் ஆலயம் கட்டும் வேலை தடைப்பட்டது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்தப் பின்னணியில் ஆகாய் தமது இறைவாக்குப் பணியைச் செய்தார். ஆலயம் கட்டப்படாது பாழடைந்து இடக்கும் போது மக்களில் சிலர் மாடமாளிகைகளில் வாழ்ந்தனர். ஆலயம் கட்டுவதைப்பற்றி அக்கறையற்று இருந்தனர். இதை இறைவாக்கினர் கண்டனம் செய்கிறார். ஆலயத்தின் மட்டில் மக்கள் அக்கறை கொள்ளாமல் அலட்சியமான புறக்கணிப்புடன் வாழ்ந்துவந்த படியால் இறைவன் அதற்கு தண்டனையாக வரட்சி, குறைந்த அறுவடை, உணவு உடை பற்றுக்குறை போன்ற சீர்கேடுகள் விளைவதற்கு விட்டுவிட்டார். என இறைவாக்கினர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆகாய் இறைவாக்கினரின் உணர்ச்சிமிக்க நேரடியான போதகங்களால் தூண்டப்பெற்று மக்கள் ஆலயம் கட்டும் வேலையைத் தொடர்ந்தனர். தங்கள் உழைப்பைத் தானம் செய்தனர். அவர்களுடைய ஒத்துழைப்பால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இந்த இரண்டாம் ஆலயம் பெரிய ஏரோது கி. மு. 20ல் புதியதொரு ஆலயத்தைக் கட்டும்வரை ஐந்து நூற்றுண்டுகளுக்கு யூதமக்களின் வழிபாட்டுத் தலமாகத் திகழ்ந்தது.

இ. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 87

## வெண்கலப் பாம்பு 2

பழங்கால மத்திய கிழக்கு நாடுகளில் பாம்பை மக்கள் செழிப்பின் சின்னமாகவும், உயிர் நிலையின் அடையாளமாகவும் போற்றிவந்தனர். அத்தோடு உடல்நலத்தைக் காட்டும் குறியாகவும், நோயை அகற்றும் அடையாளமாகவும் பாம்பைக் கருதியிருக்கலாம் இஸ்ராயேல் மக்களின் சட்டங்கள் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் அவர்களின் சுற்றுப்புற நாடுகளை சார்ந்ததாகவே இருந்தன. எனவே இந்த வெண்கலப் பாம்புச் சின்னத்தையுப் அவர்கள உபயோகித்து இருக்கலாம்

இஸ்ராயேலரின் வரலாறு என்ற புத்தகத்தில் 'ரிச்சி யோட்டி' என்பவர் பாம்பு எதைக் குறிக்கிறது என்பது வெளிப்படையாக நமக்கு அறிவுறுத்தப்படவில்லை. ஆயினும் புதைபொருள் ஆராய்சசிகள் சில உண்மைகளைக் கூறுகின்றன. வெண்கலப் பாம்பு இஸ்ராயலருடைய கி. மு. 1000 காலத்தைச் சார்ந்த ஒரு தாயத்து. $6\frac{3}{4}$ அங்குல நீளமுடைய இது காசா என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட $9\frac{2}{4}$ அங்குல நீளமுடைய பாம்பு சின்னத்தைடபோல் இருக்கிறது என்று கூறுகிறார்

எசெக்கியாசின் ஆட்சியை மோயீசன் செய்ததாகக் கருதப்படும் வெண்கலப் பாம்புக்கு இஸ்ராயேல் மக்கள் தூபகாலக்கை செலுத்தி வணங்கியதாக அறிகிறோம் (2 அரசர் 18:4)

ஆனால் இந்நிகழ்ச்சியில் வலியுறுத்தப்படும் மறை உண்மையை நாம் கவனிசகவேண்டும். கடவுள் ஒருவரே என்ற தன்னிகரற்ற உண்மை உணர்த்தப்படுகின்றது. நோயை நீக்குவது பாம்பு அல்ல. தகுதியற்ற பொருட்களைக் கொண்டு கடவுள் மட்டும்தான் உதவமுடியும். இங்கு கடவுளின் தனிப் பெரும் வல்லமையும் பெருமையும் எடுத்துக்காட்டப்படுகிறது.

இப் பாம்பு அருளப்பரின் கருத்துப்படி கிறிஸ்து சிலுவை அளிக்கும் மீட்புக்கு அடையாளமாகும் (அருள். 3: 14). வெண்கலப் பாம்பு கோலில் உயர்த்தப்படுகிறது. கிறிஸ்து சிலுவையில் உயர்த்தப்படுகிறார். இரண்டிலும் விசுவசித்து நம்புவோர் மீட்படைகின்றனர்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

ஒப்பிட்டுப்பார்ப்பவர்களே!
உற்றுக்கவனியுங்கள்!!

"கல்லானே ஆனலும்-
கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லோரும் சென்றங்கெதிர்
கொள்வர்- இல்லானை
இல்லாளும் வேண்டாள்- மற்,
ஈன்றெடுத்ததாய் வேண்டாள்-
சொல்லாதவன் வாயிற்-
சொல்"

என்று 'நாலடியாரிலே' நம் முன்னோர் உரைத்தவைகள் எவ்வளவு ஆழமும்- அகலமும்- நீளமுமாக இருந்திருக்கிறது. 'படித்தவன்' பாமரனுக- ஏழையாக இருந்துவிட்டால் அவன் வாயின் சொல்லும்- செல்லாது!

அக்கிரமத்தின் உச்சக்கட்டத்தைப் பார்க்கிறீர்கள் தானே! ''பணமில்லாதவன் பிணம்'' என்ற நம் முன்னோர் முதுமொழியையும், ஒப்பிடுங்களேன்...!

ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட இறைவார்த்தை சலித்ததல்ல! ஏழைகளை உச்சக்கட்டத்திலே வைத்து- உயர்த்தப் பேசுகின்றூர் எப்படி-?

18/23 இல் "ஏழை தாழ்ச்சியுடன் பேசுவான்! செல்வமுடையோன், கடுமையாய்க் கத்துவான்" என்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாது, இன்னென்றையும் கூறி- பணத்தாசை மிகப்பிடித்து, தன் சொந்தச்சகோதரர்களையும் தூக்கி வீசி, திமிர்பிடித்தலையும் கூட்டத்துக்கு உறைக்க- உறைக்கப் 18/24 இல் தருகின்றூர். இவ்வாறு:-

''பலருக்குப் பிரியமுள்ள மனிதன்- தன் சகோதரரைக் காட்டிலும் அதிகமாய் 'அவர்களால்' நேசிக்கப்படுவான்'' என்று! ஆம் அன்பர்களே!

"பணம் பத்தும் செய்யும்- அது பாதாளம் மட்டும் பாயும்'' என்ற நம் முன்னோர் கூறியவற்றை நீங்கள் கவனத்தில் எடுக்காதீர்கள்! ஏனெனில்:- மனச்சாட்சியை அடகு வைத்து சோதரர்களை- அயலவர்களை சுரண்டிச் சீரப்பவர்களை இறைவன் மன்னிக்கமாட்டார். "நின்று தண்டித்துக் கொண்டே இருப்பார்'' என்ற தத்துவத்தை மனதில் கொண்டு கவிஞன் தன் மனச்சாட்சியைத் தட்டிப்பார்த்து- தன்னையே நோக்கி எழுப்பிய கேள்வி 'ஆயிரம் இருந்தும், வசதிகள் இருந்தும்? NO PEACE OF MIND! ''ஆம் மனதில் அமைதி இருக்காது! சோதரர்களில் - அயலவர்களில் இறைவனைக்காண முயற்சிப்போமா? மீண்டும் வருவேன்- தருவேன்!!

### வாரம் ஒரு சிந்தனை

"பட்ட மரத்தை எரிப்பாருண்டு! சில மனிதர்கள் ஏன் பச்சை மரத்தை எரிக்கின்றூர்கள் -...??? "

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதன்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 30 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை:

அச்சமுறுங்கள், பாவத்தை விடுங்கள்;
இரவிலும் உள்ளத்தில் இறைவனைத் தியானித்து
அமைதியாயிருங்கள். சங். 4: 4.

### வேண்டுதல் சொல்லாயோ!

அனைத்து ஒடுக்கல்கள் மத்தியில்
அகப்பட்ட கண்மணகள் எங்களுக்கு
கல்விக் கதவுகள் திறப்பதற்கு
வேண்டுதல் சொல்லாயோ காவலனே!

அ. ஷாலின் பிரான்சிஸ்
அங். எண். 44.

கண்மணிகளே!

அனைத்து ஒடுக்கல்களும் அடங்கி ஒடுங்க உணவில் மிதமாகவும், உழைப்பில் சுறுசுறுப்பாகவும், செயல் திட்டத்தில் உறுதியாகவும் இருந்து, இறையுணர்வுடன் பரலோக மந்திரத்தைப் பலமுறை சொல்லுங்கள், பலம் பெறுவீர், பலன்பெறுவீர்.

அன்புடன் அன்பு விழி.

### அறிந்து சொல்

தன் சுயநிலை மறந்து
தவறுகள் பல புரிந்து—தன்
அயலவர் குறைகாண அலையும் கூட்டமே,
ஆண்டவன் படைப்பிலே—இவ்
அவனி மாந்தர் அனைவரும்—உன்
அன்பார்ந்த சகோதரம் அல்லவா;
இதை நீ.
மறந்ததனுல் அல்லவோ—அவர்கள்
மனங்களை மழுங்கடிக்க
அரை குறை வார்த்தையினுல்
அயலவர் குறைபெருக்கி
அவர்கள் வாழும் இடங்களிலே
அடிமைகள் போல் அவர்களையாக்குகின்றூய்.
அறியா அறிவிலியே—இவையால்
நீ பெறும் பலன் என்ன;—என
அலசிப்பார் இவைதனை
அறிந்து சொல் நீ இதனை.

வெ. யூஜின்
அங். எண். A/10 வாகரை.

### கலங்காதே மனமே

சக மாணவர்கள உங்களை அநியாயமாகத் தூற்றும்போது, ஆசிரியர் உங்களைத் தவருகப் புரிந்து கொண்டு தண்டிக்கின்ற போது, தேர்வில் தோல்வியுறும்போது எப்படித் தோன்றுகின்றது? வாழ்வின் இனிமையே மறைந்து விட்டதாகவா? வேண்டாம். அப்படியெல்லாம் நினைத்துவிட வேண்டாம். சற்று வெளியே வாருங்கள; நேற்று வீசிய தென்றல் உங்களை இன்றும் தழுவக் காத்திருக்கின்றது. நேற்று இருந்த நிலவு இன்னும் ஒளிவீசி மகிழ்க்க விரும்பி உங்கள் வீட்டு வாசலைய நோக்கிக் கொண்டிருக்கிறது மலர்கள் சிரித்துச் சிரித்து உங்களையும் சிரிக்கச் சொல்கின்றன. இந்த உலகமே அப்படியேதான் வியாபித்திருக்கிறது—உங்களுக்காக மறந்துவிடாதீர்கள்—கடவுள் உங்களை என்றும் நேசித்துக் கொண்டே இருக்கிறார்.

செல்வி: ஜெனிவி தனபாலன் பெர்னுண்டோ
அங். எண்: 137.

### மகிழ்ந்திருக்க வழி

* ஒவ்வொரு நாளையும் ஏற்றுக்கொள்
அடிக்கடி இறைவனை நினை!
* எவரையும் ஏற்றுக்கொள். குறைகூருதே!
* இறை சித்தத்தை ஏற்றுக்கொள். முறையிடாதே!
எப்பணியையும் ஏற்றுக்கொள். சேவை செய்திரு.
* வாழ்க்கையை ஏற்றுக்கொள். சமாதானக்கருவியாயிரு!

நீ. சந்தியோகு அங். எண். A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஓவியப் போட்டி 8இல்

## பரிசு பெறும் ஓவியம்



மரியாளின் விண்ணேற்றம்

# முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயப் பொன்விழா

அருட் தந்தை தார்சீயஸ், அவர்களினுல் 1936-ல் ஆரம்பிக்கப்பட்டு 19.9ல் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது 19-8-1989ல் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பொன்விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அன்பின் ஆட்சியிலே ஐம்பது ஆண்டுகளைக் கடந்து விட்ட மகிழ்ச்சியோடு ஆலயம் கம்பீரயாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. 16 சிற்றுலயங்கள் என்னும் விழுதுகள் தாங்கி நிற்க, ஆன்மீக நிழல் தந்து அனைவரையும் அணைத்து நிற்கின்ற ஆலமரமாக முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம் பொன்விழாக் கோலத்தில் புதுப் பொலிவுடன் விளங்கிக் கொண்டிருந்தது.

முக்கியத்துவம் மிக்க இந்த நிகழ்வைச் சிறப்பிக்க அதிவந். ஆயர். L.R. அன்ரனி அவர்கள் வருகை தந்திருந்தார்கள், ஆயரையும் மன்னர் மறைவட்ட முதல்வர் சேவியர் குருஸ் அடிகளாரையும், அருட் தந்தை தேவருஜா அவர்களையும் மன்னர் மேலதிக அரசாங்க அதிபர் உயர்திரு. செபநாயகம் மன்னர் மாவட்ட காணி அதிகாரி திரு எட்வேட். மற்றும் அதிகாரிகளையும் பங்குச் சபையினர் பிரதான நுழைவாயிலில் வைத்து மாலையிட்டு வரவேற்றனர்.

" ஆலயத் திருமணி ஆர்ப்பரித்து ஒலித்திட - தன அரசராம கிறிஸ்துவை ஆராதத்து ஒலித்திட; " மங்கையர் ஆரத்தி எடுக்க, சுவரங்களின் அரசராகிய இறைவனுக்கு இன்னிசை முழங்க ஆயரான கூட்டுத்திருப்பலி தொடங்கியது. மிகச்சிறப்பான மறையுரை அருட் தந்தை ஜெரோம் லம்பேட் அவர்களினுல் வழங்கப்பட்டது. இந்த ஐம்பது ஆண்டுகளில் முருங்கன் பங்கிலே அன்பப்பணியாற்றிய சகல குருக்களுக்காகவும், தம் பங்கிலே இருந்து இறைபணிக்கு அழைக்கப்பட்ட குருக்களுக்காகவும் விசுவாசிகள் விசேடவிதமாக மன்ருடினர்கள்.

முருங்கன் கார்மேல் கன்னியர்கள் பொன்விழா குழுவின் ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக இருந்து சிறப்பாக வழி நடத்தினர். பாடகர் குழாமின் பொன்விழாத் திருப்பலிப் பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. மாலையில் கலைநிகழ்ச்சிகளும், விளையாட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது.

முருங்கன் பங்கிலே இதுவரை நடைபெற்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கெல்லாம் சிகரமாய் அமைந்த கிறிஸ்து அரசர் ஆலயப்பொன்விழா நிகழ்வினை - முருங்கன் வரலாற்று ஏடு மிகப் பெருமையுடன் பதிவு செய்து கொண்டது.

தகவல்:- ஜெயாபலாஜி முருங்கன்.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

''தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை.'' அருள். 15: 13.



அ. ஜோன் போல்
இதயராஜ் லெம்பேட்
(நிசாம்)

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 18-11-1968 | 30-07-1989 |

இதயத்தில் நிறைந்த
இதயராஜ்—தமிழீழ
உதயத்தின் முன்னே
உன்னுவி பிரிந்ததுவோ,
உள்ளத்தில்எழுந்தஉன்னின்பக்
கனவுகள் பெரும்
பள்ளத்தில் வீழ்ந்து
நொறுங்கியதோ,
பாழ்பட்ட காலமது
செய்வாதையாலே—நீ
வாழ்வற்றுப் போனுயோ
மகனே இதயராஜ்.
மாசுபடா உன்மேனி
தூசுபடக் காலமாமோ-இனி
யேசுவை வேண்டி நிற்போம்
உன் ஆன்மா சாந்தி பெற.

29-08-89 காலை 615 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஆன்ம சாந்திப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பெற்றோர் V. A. லெம்பேட்
மெற்றில்டா, சகோதரர்,
உறவினர், நண்பர்.
வங்காலை—2 A/184

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



போல் தம்பிநாயகம்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 06-06-1935 | 03-09-1988 |

இவரது ஆன்ம சாந்திக்காக 04-09-1989 திங்கட்கிழமை மாலை 4-30 மணியளவில் தெல்லிப்பளை புனித இராயப்பர், சின்னப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின்பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
உற்றார், உறவினர்.

தெல்லிப்பளை. A/182

---

### வாசகர் கருத்து

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் வியப்புக்குரியதாய் இல்லையா? பூ மண்டலத்தின் அழகை விரித்து வைத்திருக்கும் புத்தகத்தை வாசித்துப் பார்.

ஒளி கொடுக்கும் வானும் உணவூட்டும் பூமியும் அவரின் கையைவிரிக்கும் போது நலன்களால் நிறைகின்றன. மறுபடி கையை ஒடுக்கினுல் கொந்தளித்துக் குமுறும். அனைத்துச் சீவராசிகளும் அவரது கட்டளைப்படியே சீவிக்கின்றன — மடிகின்றன. இவ்வாறு அவரின் சொல்லும் செயலும் அவரை வெளிப்படுத்துகின்றனவே.

''உங்களை நடத்துபவராகிய ஆண்டவர் உன்னோடு இருப்பாரேயன்றி, அவர் உன்னை விட்டு நீங்கவும், உன்னைக்கை நழுவ விடவும் மாட்டார்.'' என்பது இறைவாக்கு (உப138).

எமது உள்ளமும் அவரது கோவிலே. அப்படியெல்லாம் இறைவன் எம்மை ஆட்கொள்ளத் தக்கதாக, அவரை அங்கு இங்கெல்லாம் தேடி அலைவானேன். காணவில்லை என முறைப்படுவானேன்.

ஜெ. துஷ்யந்தன்
பாண்டியன் தாழ்வு

---

முகமாலை

## புனித ஆரோக்கிய மாதா
## (வேளாங்கண்ணி)
## திருவிழா

17—0,—19 9

08-09-89 வெள்ளி மாலை 4 மணி, கொடியேற்றம், நோவினை—திருப்பலி.

தினமும் மாலை 4 மணிக்கு நோவினை திருப்பலி.

16-09-89 சனி நற்கருணைத்தினம், மாலை 4 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பமாகும்.

17-09-89 ஞாயிறு திருவிழா காலை 7 மணிக்கு ஆயருடன் கூட்டுத் திருப்பலி, திருச்சுருபப் பவனியுடன் திருவிழா முடிவடையும்.

A/185 பங்குத்தந்தை.

---

கரம்பொன்

அன்னை வேளாங்கண்ணி

## யாத்திரைத் தலவிழா

(செப்ரெம்பர் 8ஆம் திகதியின் பின்வரும் ஞாயிறு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7-ம் திகதி | மாலை | 5 | மணிக்கு | திருச்செபமாலையும் | திருப்பலியும் |
| 8-ம் திகதி | ,, | 5 | ,, | ,, | ,, |
| 9-ம் திகதி | ,, | 5 | ,, | ,, | ,, |

10-ம் திகதி காலை 6-30 மணிக்கு திருநாட் திருப்பலியும் சுருப ஆசீரும்.

கரம்பொன் — பங்குத்தந்தை..

---

## சுருவில் - அன்னைமரி மாதா திருவிழா

30 ஆம் திகதி மாலை 5.30 திருச்செபமாலை கொடியேற்றம் திருப்பலி.

7 ஆம் திகதி காலை 6.30 முதல்நன்மை திருப்பலி மாலை 6.30 நற்கருணை வழிபாடு.

8 ஆம் திகதி காலை 6.30 திருநாள் திருப்பலி.

மறையுரைகள்:- அருள்திரு. இயூஜீன் பிரான்சீஸ் அருள்திரு. ஜெரூட் சவரிமுத்து அடிகள்.

கரம்பன் பங்குத்தந்தை

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு —45

அடைக்கலம்: இதில போறவரைத் தெரியுமாண்ணை! ஆளோட மிகவும் கவனமாப்பிளங்கவேணும் அண்ணை.

குருசுமுத்தண்ணை:- ஏன்ரா தம்பி, இப்பதானே வாயொழுகக் கதைச்சாய் அவரோட. கொஞ்சம் விலத்தினதும் உன்ரை பேச்சு இப்பிடி மாறுதே. உன்னை எப்பிடி அவங்கள் மதிக்கிறுங்களோ?

அடைக்கலம்:- இவையளோட இப்படித்தான் பழக வேண்டுமண்ணை.

குருசுமுத்தண்ணை:- எட தம்பி இப்ப உன்ரை கதைக்கப் பயமாயிருக்கடா தம்பி. பின் நான் விலத்தினதும் என்னத்தைக் கதைப்பியோ. இப்ப யாரிட்ட என்னத்தைக் கதைக்கிறதெண்டதையும் படிக்க ஒரு பல்கலைக்கழகம் எல்லோ வேணும் போல கிடக்கு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# 'கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கு கூடியநேரம் அளிக்குக'

வானொலியிலும் தொலைக் காட்சியிலும் தமக்குக் கூடிய நேரம் தரும்படியும் பத்திரிகைகளில் தமது கருத்துக்களை வெளியிடப் போதிய இடம் தரும்படி கிறிஸ்தவர்கள் பாகிஸ்தான் அரசைக் கேட்டுள்ளனர்.

''வானொலியிலும் தொலைக் காட்சியிலும் கிறிஸ்தவர்களுக்கு தகுந்த நேரம் அளிக்கப் படும்'' என்று பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் தேசிய பேரவையின் கிறிஸ்தவ உறுப்பினருக்கும் ஓர் உடன்பாடு இருந்தது.

சிறுபான்மையினர் விவகார அமைச்சரான பிதா றுவின் ஜூலியஸ் தாம் தகவல் ஒலிபரப்பு அமைச்சரிடம் இது பற்றிப் பேசியதாகவும் அடுத்த ஆண்டில் உயிர்ப்பு விழாவுக்கும் நத்தார் விழாவுக்கும் கூடிய நேரம், அதாவது ஒரு மணித்தியாலயம் அளிக்கப் படும் என அவர் கூறியதாகவும் தெரிவித்தார். ஆனால் நிகழ்ச்சிகள் தரப்படுத்தப்பட்டு கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் காட்டுவனவாயிருக்க வேண்டும் அத்துடன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாது பொதுவிலும் தமது உணர்வுகளை வெளிபிடவேண்டும்என்று அவர் கூறினர்.

## வடபகுதி அ.ம.திகள் ஒரு மாகாணமாகப் பிரகடனம்

அமல மரித் தியாகிகள் வாழும் வட பிராந்தியம் தற்போது ஒரு மாகாணமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமதிகளின் உயர்தலைவர் பேரருட் திரு மார்சல்லோ சாகோ அ. ம. தி. அவர்களே கடந்த புதன்கிழமை(23-08-89)அன்று இதைப் பிரகடனப்படுத்தியுள்ளார் கடந்த 84-ம் ஆண்டிலிருந்து இப்பகுதி கொழும்பு மாகாணத்திலிருந்து பிரிந்து உரோமாபுரியின் நேரடிக் கண் காணிப்பின்கீழ் பிரதிநிதித்துவப் பகுதியாக இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 5 வருட காலமாக வட பிராந்தியத்தின் அமதிகளின் தலைவராக விளங்கி வந்த அருள்திரு லூயிஸ் பொன்னையா அ. ம. தி அவர்களே தொடர்ந்தும் மாகாணத் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்கள். இப் புதிய நிர்வாகம் சுயமாக இயங்குவதற்கான கூடுதலான அதிகாரங்களையும் பெற்றுள்ளது.

## பாட்னுவில் கத்தோலிக்க குருக்கள் சங்கம்

பாட்னு மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் பலர் இந்திய தேசிய குருக்கள் சங்கத்தின் ஒரு கிளையை பாட்னுவில் ஆரம்பிப்பதற்காக ஒன்று கூடினர். இக்கூட்டம் பாட்னு மேய்ப்புப்பணி நடுநிலையத்தில் நடைபெற்றது.

மறைமாவட்டக் குருக்களிடையே தோழமையைக் கட்டியெழுப்புவது பற்றியும், அவர்களது ஆன்மீகம்பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

கிளையின் தலைவராக பிதா பிரான்ஸிஸ் மட்டத்திலானி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் செய்தியாளருக்குத் தகவல் தருகையில் தமது குறிக்கோள்களை விளக்கினர். தம்மிடையே தோழமையை வளர்த்து, தமது பிரச்சினைகள், துன்பங்கள் முதலியவற்றை பகிர்ந்து கொள்வதற்கும், ஏனைய அங்கத்தவரிடமிருந்து ஆலோசனையும் ஊக்குவித்தலும் பெறுவதற்கும், தமது பணியை மதிப்பீடு செய்வதற்கும் இச்சங்கம் துணை புரியுமென்று அவர் கூறினர்.

செயலாளரான பிதா ஜேம்ஸ் அமகட் தமது சங்கமானது மக்கள் வாழ்விலும் திருச்சபையிலும் தாக்கம் ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்து தமது பணிக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளப் போவதாகக் கூறினர்.

மறைமாவட்டத்தின் 39 குருக்களில் சுமார் 15 பேர் சங்கத்தின் அங்கத்தவராகச் சேர்ந்துள்ளனர்.

1987-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்திய தேசிய குருக்கள் சங்கத்தில் சுமார் 400 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

## பிதா லொபோவின் நூல்கள்

பிதா லொபோ எழுதிய ''புதிய திருமணச் சட்டம்'' என்னும் நூலின் மூன்ரும் பதிப்பு வெளிவந்துள்ளது. இத்துடன் அவர் இறையியல், திருச்சபைச் சட்டம் ஆகியவை பற்றி வெளியிட்ட நூல்கள் 50,000 பிரதிகளுக்கு மேல் அச்சாகியுள்ளன.

இவர் ஏழு நூல்களும், ஏறக்குறைய 200 கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவர் எழுதிய முக்கிய நூல் 2 ஆம் வத்திக்கான் சங்கத்துக்கமைந்தகிறிஸ்தவ வாழ்வு''

இவர் எழுதிய ''வைத்திய அறநெறி'' பம்பாய் பல்கலைக் கழகத்தில் ஒரு பாடநூலாகும்.

கர்நாடகத்தைச் சேர்ந்த இயேசுசபைக் குருவான பிதா லொபோ ஞானதீப வித்தியா பீடத்தில் ஒரு பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

## திருக்காட்சி விழாவும் திருநிலைப்படுத்தலும்

கோட்டாறு ஆயர் பிதா லியன் தர்மராஜ் ரோமாபுரியில் திருத்தந்தையினுல் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஜனவரி 6-ம் திகதி மிஷன் நாடுகளைச் சேர்ந்த பல ஆயர்களை திருத்தந்தை திரு நிலைப் படுத்தினர். கிறிஸ்துநாதர் புற இனத்தாரின் மீட்பர் என்பதை எடுத்துக்காட்டும் திருக்காட்சி விழாவின்போது ஆயர்களைத் திருநிலைப்படுத்தும் வழக்கத்தை தற்போதைய பாப்பரசரே ஆரம்பித்தவர்.

புதிய ஆயர் ஜனவரி 28 அன்று தமது மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்பார். 47 வயதான பிதா தர்மராஜ் 1966-ல் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

இசைக் கலைஞரும், சமூக சேவையாளருமான இவர் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தின் பங்குக்குருவாகவும், மறைமாவட்டமுதல்வராகவும் இருந்து வந்தார்.

கோட்டாறு மறைமாவட்டம் 94 பங்குகளையும், மூன்று இலட்சம் கத்தோலிக்கரையும் கொண்டது.

பிதா தர்மராஜுக்குப் பின் பிதா பீற்றர் ரெமிஜியஸ் பேராலய பங்குக் குருவாகவும் மறைமாவட்ட முதல்வராகவும் நியமனம்பெற்றுள்ளார்.

கோட்டாறு பங்கு 1600இல் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் வேனுட்டு அரசராயிருந்த உன்னிகேரளவர் மானன்கொடையாக அளித்த காணியிலேயே இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது. வடகருடைய படையெடுப்பைத் தடுப்பதற்கு துணைபுரிந்தமைக்காக புனித பிரான்ஸிஸ் சவேரியாருக்கு இந்நிலம் அரசனுல் வழங்கப்பட்டது.

## திருச்சபையின் அதிகாரம்

இறையியல் ஆராய்ச்சி பற்றி மே 17 ஆம் திகதி வத்திக்கானில் உரையாற்றிய திருத்தந்தை, உண்மையின் ஆவியால் வழிநடத்தப்படும் திருச்சபையின் கற்பிக்கும் அதிகாரத்துக்கு விரோதமாக இறையியல் ஆராய்ச்சி அமையக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

அப்போஸ்தலர் மேல் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவி தொடர்ந்தும் திருச்சபைக்கு அனுப்பப்படுகிருர் என்றும் அந்த ஆவியே திருச்சபைக்கு அனைத்தையும் கற்பித்து தொடர்ந்தும் வழிநடத்தி வருகின்றது என்றும் கூறிய திருத்தந்தை வேதாகம விளக்கம், இறையியல் ஆராய்ச்சி என்பன கற்பிக்கும், திருச்சபைக்கும் பரிசுத்த ஆவிக்கும் விரோதமாக அமையக்கூடாது என்ருர்.

## ஆயர்கள் கம்பியூட்டர் கற்றனர்

கேரளத்தின் இருபது கத்தோலிக்க ஆயர்கள் கொச்சின் மேய்ப்புப்பணி நடுநிலையத்தில் நடத்தப்பட்ட கம்பியூட்டர் கல்வித் திட்டமொன்றில் கலந்துகொண்டு மிகுந்த ஆர்வத்துடன் விளக்கங்களைக் கேட்டனர். திருச்சபையின் அன்ருட அலுவல்களில் எவ்விதம் பயன்படுத்தப்படலாம்என்பதுபற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. கம்பியூட்டர் சித்திரம் வரைவதையும் எழுதுவதையும் ஆயர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

ரோமாபுரியில் மைக்கல் அஞ்சலோ என்னும் ஓவியர் பல மாதங்கள் எடுத்து தீட்டிய சித்திரத்தை சில மணித்தியாலங்களுக்குள் பூர்த்தி செய்துவிடும். ''உங்களில் ஒருவன் என்னைக்காட்டிக்கொடுப்பான்' என்று கூறிய வேளையில் இயேசுவின் முகத்திலிருந்த சாந்தத்தையும் அப்போஸ்தலர் முகத்திலிருந்த கலவரத்தையும் கம்பியூட்டர் அப்படியே எடுத்துக் காட்டியது.

கேரள ஆயர் பேரவையின் தொடர்பு சாதன ஆணைக்குழுவினுல் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நவீன கருவி தமது மறை மாவட்டத்தின் நிர்வாகத்துக்கு பெரிதும் பயன்படுமென்று ஆயர்கள் கருதுகின்றனர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
வ.இல: QB/ 1001/ 58/81

## அன்பில் ஒன்றிணைத்த அன்ரன்குருஸ் அடிகளார்

ஊர்காவற்றுறை பங்கில் ஆவணிமாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை 9-ம் திகதி புதன் கிழமையும் புனித அந்தோனிபார் ஆலயத்தில் தமிழ் நாட்டைச்சேர்ந்த வணக்கத்திற்குரிய அன்ரன் குருஸ் அடிகளாரின் சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன 8-ம் திகதி காலை 9 மணியளவில் இறை புகழ்ச்சியுடன் வழிபாடு ஆரம்பமாகியது. பின் இறை வார்த்தைகள் வாசிக்கப்பட்டு விளக்கங்களும் அடிகளாரால் கொடுக்கப்பட்டது. தனது வாழ்க்கையில் நடந்த புதுமைகள் ஊடாக இறைவன் தன்னேடு எவ்வாறு ஒன்றித்திருக்கிருர் என்றும் அதுபோல் எமது வாழ்க்கையிலும் இன்னல்கள், இடையூறுகள், ஏற்பட்ட போதும் இறைவன் எம்முடன் உள்ளார் என்று இறைவனின் நாமத்தை உச்சரித்து எமது துன்பத்தை ஏற்று வாழும் முறையை விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறினர். பின் 6-ம் திகதி புதன்கிழமையும் காலை 9 மணியளவில் இறை புகழ்ச்சியோடு வழிபாடு ஆரம்பமாகியது. அன்று நோயாளருக்காக சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன. உடல், உளரீதியான நோய்களுக்காக இறைவனிடம் மிகவும் உருக்கமாகச் செபித்தார். பலவிதமான நோய்களுக்காக மக்கள் அவரது செபத்தை நாடினர். இறைவனுடன் நாம் கொள்ளும் தொடர்பு சாதனம் செபம். அவரில் நாம் கொள்ளும் நம்பிக்கை, மதலேன் மரியாள் சக்கேயு கொண்டிருந்த நம்பிக், கையைப்போல் இருக்க வேண்டும் அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையால் அவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டன. நாமும் அவரில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் எமது பாவம் கட்டாயம் மன்னிக்கப் படும் என்று வலியுறுத்திக் கூறினர். பின் இரண்டு மணியளவில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் வழிபாடு முடிவடைந்தது. இவ்வழிபாட்டிற்கு ஊர்காவற்றுறை, கரம்பன் நாரந்தனை ஆகிய இடங்களிலிருந்து மக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்.

தகவல்:-
நீற்ரு சிவந்தி கொலின்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நான் உன்னோடிருக்கிறேம் என்கிருர் ஆண்டவர்